வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 31.08.2021 செவ்வாய்க்கிழமை | இதழ் : 270 | பக்கங்கள் : 16

# ஜெனிவா விவகாரம் குறித்து சர்வதேசத்துக்கு விளக்கம்

## அங்கு நடப்பது மனித உரிமை விவகாரமா? அரசியலா? என அமைச்சர் பீரிஸ் கேள்வி



கொழும்பு, ஓக. 31,

**“ஒவ்வொரு வருடமும் ஜெனிவாவில் இலங்கை குறித்து குற்றச்சாட்டுக்களை முன் வைத்து வருகின்றமையிட்டு அதிர்ச்சியடைகின்றோம். இதற்கு உண்மையான காரணம் என்ன என்கின்ற பிரச்னை எழுகின்றது. உண்மையில் இது மனித உரிமைகளுடன் சம்பந்தப்பட்டதா? அதற்கு அப்பாலான அரசியல் நிகழ்ச்சி நிரலா?” எனக் கேள்வி எழுப்பியிருக்கின்றார் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்.**

சிறீலங்கா பொதுஜன முன்னணியின் ஊடக சந்திப்பு கொழும்பு பத்தரமுல்லை நெலும் மாவத்தையில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்றபோதே பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இவ்வாறு கேள்வி எழுப்பினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“கடந்த சில வாரங்களாக சர்வதேச ரீதியில் இலங்கைக்கு மிக முக்கியமான பேச்சுக்கள் நடத்தப்பட்டுவருகின்றன.

செப்ரெம்பர் 12ஆம் திகதி ஐ.நா மனித உரிமைப் பேரவை ஜெனிவா நகரில் கூடுகின் றது. செப்ரெம்பர் 21ஆம் திகதி ஐ.நா பொதுச் சபைக் கூட்டம் நியூயோர்க் நகரில் கூடுகின்றது. இவ்விரண்டு மாநாடுகளிலும் நாம் எமது நாட்டிற் கான அனைத்து நலன்களையும் பெற எதிர்

15

# கொரோனாவால் வடக்கில் 8 பேர் பலி!

யாழ்ப்பாணம், ஓக. 31

கொரோனா தொற்றால் நேற்று மட்டும் யாழ்ப்பாணத்தில் 6 பேரும், கிளிநொச்சியில் இருவருமாக வடக்கில் 8 பேர் உயிரிழந்தனர்.

யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த 62 வயது ஆண், யாழ். மாநகரை சேர்ந்த 65 வயது பெண், மாவிட்டபுரத்தை சேர்ந்த 63 வயது ஆண், கொடிகாமத்தை சேர்ந்த ஆண், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற செம்பியன்பற்றை சேர்ந்த 63 வயது ஆண், வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 89 வயதுடைய ஆண் ஆகியோரே

15

# 216 பேர் தொற்றுக்கு பலி!

கொழும்பு, ஓக. 31

நாட்டில் கொரோனா தொற்றால் ஒரே நாளில் 216 பேர் உயிரிழந்தனர். இவர்கள் அனைவரும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந் தார்கள் என்று அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்தது.

இறந்தவர்களில் மூன்று ஆண்களும், இரு பெண்களுமாக 5 பேர் 30 வயதுக்கு கீழ்பட்டவர் களாவர். 21 ஆண்களும், 20 பெண்களுமாக 41 பேர் 30 - 59 வயது

15

# 4,562 தொற்றாளர்கள் நேற்று அடையாளம்

கொழும்பு, ஓக. 31

நாட்டில் நேற்று 4 ஆயிரத்து 562 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 36 ஆயிரத்து 81 ஆக எகிறியுள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றி லிருந்து மேலும் 14 ஆயிரத்து 394

15

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு உண்மையில் நடந்தது என்ன?

## பதிலுக்காக பலர் காத்திருப்பு - அமெ.தூதர்



கொழும்பு, ஓக. 31

“இலங்கையில் பலரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது அன்புக்குரியவர்கள் விடயத்தில் உண்மையான பதிலைத் தேடிக்கொண்டிருக்கின்றனர்.”

- இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான சர்வதேச

15

## தொற்றால் அபாய நிலை

# 32 கர்ப்பவதிகள் பலி: 900 பேர் சிகிச்சையில்!

கொழும்பு, ஓக. 31

கொரோனா தொற்றால் நாடு முழுவதும் 32 கர்ப்பவதிகள் உயிரிழந்தனர். தற்போது 900 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதுவரை, 4,200 கர்ப்ப வதிகள் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் குடும்பநல பிரிவின் பணிப் பாளர் விசேட மருத்துவ நிபுணர் சித்திரமாலி டி சில்வா தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற

15



# இந்திய உயர்ஸ்தானிகராக மிலிந்த நேற்று பொறுப்பேற்பு

புதுடில்லி, ஓக. 31,

இந்தியாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகராக மிலிந்த மொறகொட நேற்று புதுடில்லியில் தனது பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இந்தப் பதவிக்கு அவர் நியமிக்கப்பட்டு சுமார் ஒரு வரு டத்தின் பின்னரே அந்தப் பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்டிருக்கின்றார்.

15

## அத்தியாவசிய உணவு விநியோகத்துக்காக

# அவசரகால விதிமுறைகள் நேற்றிரவு முதல் பிரகடனம்

கொழும்பு, ஓக. 31

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2ஆவது பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், அக்கட்டளைச் சட்டத்தின் iiஆவது பிரிவின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தி, 5ஆவது பிரிவின் ஏற் பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்

15

# தென்னாபிரிக்க திரிபு: இலங்கை எச்சரிக்கை!

கொழும்பு, ஓக. 31

தென்னாபிரிக்காவில் இனங் காணப்பட்ட புதிய திரிபு குறித்து இலங்கை சுகாதார திணைக்களம் எச்சரிக்கையாக உள்ளனர். இந்தத் திரிபு இதுவரை கண்டறியப்பட்ட திரிபுகளின் பிந்தைய பிறழ்வாக இருக்கலாம். அத்துடன், கோவிட் 19 தடுப் பூசிகளின் திறனை

15




**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

யாசகர் ஒருவர் தினசரி ஒரு வீட்டுக்கு வருவார். அந்த வீட்டுக்கார அம்மாவும் எதையாவது போடுவார். அவர் வாங்கிக்கொண்டு அடுத்த வீட்டுக்கு போவார். ஆனால், அந்த வீட்டு அம்மா போடவே போடாது.

தினசரி இந்த வீட்டில் கிடைப்பதும் அந்த வீட்டில் கிடைக்காததும் அவருக்கு வழக்கமாகியிருந்தது. அந்த வீட்டில் கிடைக்காது என்று தெரிந்தாலும் இவரோ போகாமலும் விடுவதில்லை.

இப்படியே நாட்கள் நகர்ந்தன. ஒருநாள் அவருக்கே ஆச்சரியம். வழக்கமாக எதையாவது கொடுக்கும் அந்த அம்மாவால் அன்று எதுவும் போடமுடியவில்லை. ஆனால், எப்போதுமே போடாத அந்த அம்மா இன்றைக்கு என்று கைநிறையக் கொடுத்தார்.

உடனே அவன் சொன்னான், “என்னைக்கும் போடாத மகராசிகூட இன்னைக்கு போட்டுட்டா, என்னைக்கும் போடுற மூதேவி இன்னைக்கு போடயில்லை” என்று.

நண்பர் ஒருவர் வந்திருந்தார். டெல்டா திரிபு மனதில் அச்சத்தை ஏற்படுத்தினாலும், வந்தவரை வரவேற்கத்தானே வேண்டும். “உங்களுக்குத் தான் இதைச் சொல்லவேண்டும் எண்டு வந்தனான்”, என்று தொடங்கினார்.

“இண்டைக்கு வழக்கமாக ஏதேனும் தேவைகளுக்கு நான் கூப்பிடுகின்ற ஓட்டோக்கார பையன் வீட்டுக்கு வந்திருந்தான், “அண்ணே எப்ப இந்த லொக்டவுண் முடியும் எண்டு கேட்டான். எனக்கு பதில் சொல்ல முடியேல்லை. உங்களுக்கு ஏதும் தெரியுமோ?”, என்றார்.

“அரசாங்கம் விரும்பவில்லையென்றாலும் இந்த முடக்கத்தால் இலாபம் அடையிறவை தொடர்ந்து முடக்கத்தை போடவேணும் எண்டுதானே விரும்புவினம்”, என்றேன்.

“இல்லை, அந்தப் பொடியன் இன்னும் ஒரு வாரம் தொடர்ந்து முடக்கினால் நாங்கள் எங்கபோய் விழுகிறது? என்று கேட்கிறான்”, என்றார்.

யுத்தம் முடிந்து சில நாட்கள் ஆகியிருக்கும், வவுனியாவில் ஒரு நண்பரைச் சந்திக்க முடிந்தது. அவர் யுத்தம் முடிந்ததை நினைத்து அலுத்துக் கொண்டார். எனக்கு ஆச்சரியம்.

“ஏனடாப்பா இப்பிடிச் சொல்லுறாய்?”, என்று கேட்டேன்.

“நான் வவுனியாவில் வேலை செய்யிறன். வெளிக்கள உத்தியோகத்தர். தினமும் புலிகளின்ர ஏரியாவுக்கு அலுவலக வேலையாக போய்வர வேணும். ஒவ்வொருநாளும் போகேக்க. மோட்டார் சைக்கிளில் பெற்றேலை நிரப்பிக்கொண்டு போனன் எண்டால் திரும்பி வாறதுக்கு தேவையான பெற்றோலை வைச்சுக்கொண்டு மிச்சத்தை அங்கை வித்துப்போடுவன். பத்தாயிரம் ரூபாய் கிடைக்கும். ஐஞ்சு நாளும் இப்படிக் கிடைக்கும் எண்டால் கணக்கைப் பாருங்களன். எல்லாம் நாசமாப் போச்சுது”, என்றார்.

எனக்கு தூக்கி வாரிப்போட்டது.

முடக்கம் எப்போது முடியும் என்று கேட்ட நண்பருக்கு இந்தக் கதையைச் சொன்னேன்.

“இந்த முடக்கம் பலருக்கு இலாபம். கொரோனா தொற்றின் இரண்டாவது அலை ஆரம்பமானதும் இரண்டாவது தடவை நாடு முடக்கப்பட்டதன் பின்னர், சுமார் ஏழு மாதங்கள் ஒருநாள்கூட அலுவலகத்திற்குப் போகாமல் சில அரச உத்தியோகத்தர்கள் சம்பளம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் கொரோனா தொற்று தொடரத்தானே விருப்பமாக இருக்கும்’ என்று நண்பர் இப்போது சொன்னார்.

ஆனால், முடக்கத்திற்கு அரசு தயக்கம் காட்டிக் கொண்டிருந்தபோது, அரசாங்கத்தை கன்னாபின்னா என்று திட்டிக்கொண்டு எழுதிய நமது கருத்துருவாக்கிகள் பற்றி அவர் சொன்ன விடயங்களை நாளை பார்ப்போம்.!

அவர்களுக்காகவே இந்த யாசகரின் கதையை எழுதியிருந்தேன்.

**- ஊர்க்குருவி**

# 30-40 வீத தொற்றாளர்கள் சமூகத்தில் உள்ளனர்!

## பொது சுகாதார பரிசோதகர் சங்கம்

கொழும்பு, ஓக. 31

நாட்டில் 30-40வீதமான கோவிட் வைரஸ் தொற்றாளர்கள் சமூகத்தில் உள்ளனர். அவர்களை



தனிமைப்படுத்தல் நிலையங்களில் வைத்து சிகிச்சையளிக்க முடியாது. முடிந்தளவு பொதுமக்களை வீடுகளில் வைத்து சிகிச்சை வழங்குவதே இப்போது இருக்கும் ஒரே வழிமுறையாகும். ஆகவே, குறைந்தது 21 நாட்களேனும் அவர்களைவீடுகளில் தனிமைப்படுத்தியத்தினால் நிலைமைகளை வெகுவாக குறைக்க முடியும்.

இவ்வாறு பொது சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

நாட்டில் கோவிட் -19 வைரஸ் பரவல் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில், தற் போதைய கட்டுப்பாடுகள், முடக்க நிலைமைகள் குறித்து தெளிவுபடுத்தும் போதே அவர் இதனை கூறினார். (ஐ)

## கௌரவிப்பு நிகழ்வு

மானிப்பாய், ஓக. 31

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தொற்று நோய் தாக்கத்தை கட்டுப்படுத்தப் போராடிய சுகாதார அலுவலகர்கள் 350 பேருக்கு ஊக்குவிப்பு பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

இந்த கௌரவிப்பு நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். சிங்கள மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

தியாகி அறக்கொடை நிதியத்தின் நிறுவுநரும் தலைவருமான வாமதேவன் தியாகேந்திரனின் நிதிப் பங்களிப்பில் ஊக்குவிப்பு பரிசுகள் வழங்கப்படவுள்ளன. அர்ப்பணிப்புடன் பணியாற்றிய 100 பொதுச் சுகாதார பரிசோதகர்களும், 250 பொதுச் சுகாதார மாதுக்களுமாக 350 பேர் இவ்வாறு கௌரவிக்கப் படவுள்ளனர்.

இந்த நிகழ்வில், யாழ். மாவட்ட படைகளின் கட்டளை தளபதியும், கோவிட் 19 தொற்று கட்டுப்பாட்டு செயலணியின் மாவட்ட பிரதானியுமான மேஜர் ஜெனரல் ஜெகத் கொடித்துவக்கு, வாமதேவன் தியாகேந்திரன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

இதேசமயம், தெரிவு செய்யப்பட்ட ஆயிரம் குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொதிகளும் இந்த நிகழ்வில் வழங்கப்படவுள்ளன.

(ஐ-5)

## இலங்கையர்கள் வெளியேற்றம்!

கொழும்பு, ஓக. 31

ஆப்கானிஸ்தானிலிருந்து இதுவரை 66 இலங்கையர்கள் வெளியேற்றப்பட்டனர் என்று வெளவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இன்னமும் ஏழு இலங்கையர்களை மாத்திரமே அங்கிருந்து வெளியேற்ற வேண்டியுள்ளது என்று அந்த அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, 21 இலங்கையர்கள் ஆப்கானிஸ்தானிலேயே தங்கியிருக்க தீர்மானித்துள்ளனர் என்றும் கூறப்பட்டது. (ஐ)

### கல்வி TV CHANNEL-1
**31.08.2021**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | கணிதம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | கணிதம் |

### கல்வி TV CHANNEL - 2
**31.08.2021**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கணிதம் |
| 09.00 | தரம்-02 | தமிழ் |
| 09.45 | தரம்-03 | கணிதம் |
| 10.30 | தரம்-03 | English |
| 11.15 | தரம்-04 | கணிதம் |
| 12.30 | தரம்-04 | English |
| 01.15 | தரம்-05 | கணிதம் |
| 02.00 | தரம்-05 | English |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | தமிழ் |
| 06.00 | தரம்-03 | கணிதம் |
| 06.45 | தரம்-03 | English |
| 07.30 | தரம்-04 | கணிதம் |
| 08.15 | தரம்-04 | English |
| 09.00 | தரம்-05 | கணிதம் |
| 09.45 | தரம்-05 | English |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கணிதம் |
| 12.30 | தரம்-03 | English |
| 01.15 | தரம்-04 | கணிதம் |
| 02.00 | தரம்-04 | English |
| 02.45 | தரம்-05 | கணிதம் |
| 03.30 | தரம்-05 | English |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

Eelanadu
31.08.2021 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், ஆவணி 15

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# சர்வதேசத்திற்கு அஞ்சாத அரசாங்கம்!

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், வீடுகளில் இருந்தவாறே தமது அடையாள கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருக்கின்றனர். அவர்கள் வழமைபோலவே, சர்வதேசத்தின் தலையீட்டை கோரியிருக்கின்றனர். இலங்கை தமிழ் அரசு கட்சியின் அரசியல் குழுவினர், ஜெனிவா அமர்வு மற்றும் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் கலந்துரையாடியிருக்கின்றனர்.

தமிழ்த் தேசிய தரப்புக்கள் தொடர்ந்தும் சர்வதேசத்தின் மீதான ஈடுபாட்டை வெளிப்படுத்தி வருகின்றனர். ஆனால், மறுபுறமோ, சர்வதேச சமூகம் தொடர்பில், தற்போதைய ஆட்சியாளர்கள் எவ்வாறான நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றனர்? உண்மையிலேயே சர்வதேச சமூகம் தொடர்பில் ராஜபக்ஷக்களின் அரசாங்கம் அச்சமடைந்திருக்கின்றதா? அரசாங்கத்தின் செயல்பாடுகளை உற்று நோக்கினால், அவர்கள் சர்வதேச சமூகம் தொடர்பில் சிறுதுளியளவேனும் அச்சமடைந்திருப்பதாகத் தெரியவில்லை. அதனை வெற்றிகரமாக சமாளிக்க முடியுமென்னும் இறுமாப்புடன் செயல்படுவதாகவே தெரிகின்றது.

கடந்த ஆட்சிக் காலத்தில் சர்வதேச சமூகத்துடன் ஒத்துழைக்கும் நோக்கில் பல்வேறு விடயங்கள் இடம்பெற்றிருந்தன. கடந்த ஆட்சிக் காலத்தில் முன்னெடுத்த விடயங்களில் போதாமைகள் இருந்தன அல்லது விடயங்கள் வேகமாக முன்னெடுக்கப்படவில்லை என்னும் அடிப்படையில் அதிருப்திகள் இருந்தமை உண்மையெனினும், ரணில் - மைத்திரி அரசாங்கம் சர்வதேச சமூகத்துடன் ஒத்துழைப்பதில் உறுதியான நிலைப்பாட்டை கொண்டிருந்தது.

ஆனால், ராஜபக்ஷக்களின் ஆட்சியில், கடந்த அரசாங்க காலத்தில் முன்னெடுத்த விடயங்கள் அனைத்தும் கைவிடப்பட்டுவிட்டன. அரசியல் பழிவாங்கல் என்னும் அடிப்படையில் ரணில் - மைத்திரி ஆட்சியில் கைது செய்யப்பட்டவர்கள் அனைவருமே தற்போது விடுதலை செய்யப்பட்டுவிட்டனர். இந்த நிலையில், பாதிக்கப்பட்ட மக்கள் உள்நாட்டு விசாரணைகளில் தங்களுக்கு நம்பிக்கை இல்லையென்று கூறுவது தர்க்கரீதியில் சரியானது. ஏனெனில், அரசாங்கத்திடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கும் விடயத்தில் எவ்விதமான உறுதியான வேலைத்திட்டமும் இல்லை. அதேவேளை யுத்த காலத்தில் இடம்பெற்ற எந்தவொரு விடயத்திற்கும் பொறுப்பு கூறமாட்டோம், என்னும், உறுதியான நிலைப்பாட்டுடனேயே அரசாங்கம் செயல்பட்டுவருகின்றது.

அரசாங்கம் சர்வதேச சமூகத்தை எண்ணி அஞ்சியிருந்தால் அல்லது பதற்றமடைந்திருந்தால், இவ்வாறு நடந்துகொள்ள நிச்சயம் வாய்ப்பில்லை. அரசாங்கத்தின் நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் சர்வதேச அழுத்தங்களை பொருட்படுத்த மாட்டோம் என்று சத்தியம் செய்வது போன்றே அமைந்திருக்கின்றன.

அரசாங்கம் எந்த நம்பிக்கையின் அடிப்படையில் இவ்வாறு உதாசீன போக்கோடு நடந்துகொள்கின்றது? இலங்கையின் மீதான சர்வதேச தலையீடுகள் ஒரு கட்டத்திற்கு மேல் நகராது அல்லது இவ்வாறான மென்மையான அழுத்தங்களின் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் மட்டும்தான் இருக்கும் என்று அரசாங்கம் கணிக்கின்றதா? சீனாவுடன் நெருக்கமாக இருக்கின்ற சூழலில் மேலும் தங்கள் மீது அழுத்தங்களை பிரயோகிக்க மேற்குலகம் முயற்சிக்காது என்று அரசாங்கம் கணிக்கின்றதா? ஏனெனில், அழுத்தங்களை அதிகரிக்கின்றபோது, கொழும்பு மேலும் சீனாவிடம் விரைவாக சரணாகதியடையும் நிலைமை ஏற்படலாம். அதனை இந்தியா மற்றும் அமெரிக்கா விரும்பாது என்று அரசாங்கம் கணிக்கின்றதா? அல்லது, அனைத்து வகையான அழுத்தங்களின் இலக்கும் ஆட்சி மாற்றம் ஒன்றில்தான் முடிவுறும். அதற்கு மேல் எதுவும் நடக்காது என்று அரசாங்கம் கணிக்கின்றதா?

அரசாங்கம் எவ்வாறான கணிப்பின் அடிப்படையில் செயல்படுகின்றது என்பதை எவராலும் சரியாகக் கணிக்க முடியாது. ஆனால், அரசாங்கம் சர்வதேச அழுத்தங்களை எண்ணி கலக்கமடையவில்லை, தடுமாறவில்லை என்பது மட்டும் வெள்ளிடைமலை. இவ்வாறான சூழலில் தமிழர் உரிமை தரப்புக்கள் என்ன செய்யலாம்? தங்களுக்குள் ஓர் ஐக்கிய முன்னணியாக செயல்படுவதும், வாய்ப்புக்கள் ஒவ்வொன்றையும் கெட்டியாக பற்றிக் கொள்வதும் மட்டும்தான் தமிழ் தலைமைகளுக்கு முன்னாலுள்ள ஒரேயொரு வழிமுறையாகும்.

# சர்வதேச அரங்குகளில் ‘மூக்குடைப்பட்ட’ அமெரிக்கா!

- அலசுவது இராஜதந்திரி -

அமெரிக்க அனுசரணையுடன் இலங்கை அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையே பேச்சுகள் இடம்பெறுகின்றன எனவும் ஆனால், அமெரிக்கா ஆப்கானிஸ்தானியர்களை கைவிட்டு விலகியதைப்போல இந்தக் பேச்சுக்களிலிலிருந்தும் விலகிவிடக்கூடாதென தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார். ஆனால், இலங்கையில் சமாதான சகவாழ்வை ஏற்படுத்தும் சந்தர்ப்பங்கள் கிடைத்தபோது அமெரிக்கா உரிய வகையில் தனது இராஜதந்திர நகர்வுகளை மேற்கொள்ளத் தவறியிருந்ததென்றே குறிப்பிடவேண்டும்.

இலங்கையில் இருபது வருடங்களுக்கு முன்னர் நோர்வேயின் அனுசரணையோடு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அன்றைய இலங்கை அரசுக்குமிடையே சமரச பேச்சு நடைபெற்றது. அப்போது அமெரிக்காவும் ஓர் அனுசரணை நாடாக தனது பங்களிப்பை வழங்கியிருந்தது.

**நோர்வே அனுசரணை**

ஆனால், நோர்வேயின் அனுசரணையோடு அமெரிக்கா, ஜப்பான், இந்தியா சுவீடன், பிரிட்டன் போன்ற நாடுகளும் தமது பங்களிப்பை வழங்கிய அச்சமரச பேச்சுக்களில் பங்கேற்று உரிய பயன்பாடுகளை பெறுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தவறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச சமூகத்தின் விரிவான பங்களிப்போடு இடம்பெற்ற அந்தப் பேச்சுக்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் உரிய வகையில் தமது பங்களிப்பை வழங்கியிருப்பார்களேயானால் வடக்கு - கிழக்கின் இறுதிக்கட்ட யுத்தம்கூட தவிர்க்கப்பட்டு பாரிய இழப்புகளின்றி தமிழீழ விடுதலைப் புலிகள் ஆக்கபூர்வமான அரசியல் முடிவுகளை எட்டியிருக்க முடியும்.

ஆனால், ஆரம்பத்தில் இந்தியாவின் உதவியோடும் பின்னர் சர்வதேச சமூகத்தின் உதவியோடும் இலங்கையில் இடம்பெற்ற பேச்சுகள் தோல்வி கண்டமைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் மதியூகமின்மையே முக்கிய காரணமாகும்.

இதுதவிர, அமெரிக்கா ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலும் அங்கம் வகித்திருந்தது. இதன்பின்னர் 2018ஆம் ஆண்டு அமெரிக்கா ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலிருந்து விலகிக் கொண்டிருந்தது. அமெரிக்கா வேண்டுமானால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகித்த நாட்களில் இலங்கை தொடர்பான ஜெனிவா பிரேரணைகளை இலங்கை அரசு அமுலாக்க இராஜதந்திர ரீதியாக அழுத்தங்களைக் கொடுத்திருக்க முடியும். ஆனால், அமெரிக்கா அவ்வாறு எதனையும் செய்திருக்கவில்லை. மாறாக இலங்கை அரசுக்கும் அமெரிக்க அரசுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு என்ற அடிப்படையில் இலங்கை ஆயுதப் படையினருக்கு பயிற்சிகளை வழங்கி வந்ததோடு இலங்கைக்கு ஆயுத தளபாடங்களையும் விநியோகித்திருந்தது.

**பிராந்திய நலன்**

இந்நிலையில் அமெரிக்காவின் அயல் நாட்டு உறவுகள் என்பது பெரிதும் அதன் பிராந்திய நலனை கருத்தில் கொண்டதாகவே அமைந்திருக்கும். எந்தவொருவகையிலும் அமெரிக்கா தனது நலன்களை புறந்தள்ளி ஒருநாட்டின் உள்நாட்டு பிரச்னைகளை கையாள முன்வந்திருக்கவில்லை.

சர்வதேச அரசியலில் அமெரிக்கா எங்கெல்லாம் கால்பதித்ததோ அங்கெல்லாம் தனது அரசியல் இராணுவ ரீதியிலான தோல்விகளோடு வெளியேறியதே வரலாறாக இருக்கின்றது. உதாரணமாக கியூபா, வியட்நாம், எதியோப்பியா போன்ற நாடுகளில் அமெரிக்காவுக்கு கிடைத்த பின்னடைவுகளை குறிப்பிடமுடியும்

தற்போது ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா தனது படையினரை வாபஸ் பெற முன்வந்திருக்கின்றது. அமெரிக்கா மாத்திரமல்ல. அதன் நேச நாடுகளும் ஆப்கானிஸ்தானிலிருந்து தமது படைகளை விலக்கி வருகின்றன.


அமெரிக்கா உலகில் ஓர் இராணுவ வல்லரசாகவும் ஜனநாயக வல்லரசாகவும் இருந்து வருகின்றது. ஆனால், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அமெரிக்கா தான் எதிர்நோக்குகின்ற சர்வதேச சவால்களை அரசியல் இராஜதந்திர ரீதியாக கையாள்வதைவிட இராணுவ ரீதியாக கையாள்வதிலேயே முனைப்பாக இருப்பதை அறியமுடியும். இதன் காரணமாக அமெரிக்கா கையாண்ட சர்வதேச பிரச்னைகள் பலவற்றிலிருந்தும் “மூக்குடைபட்டு” சென்றுள்ளதையே அவதானிக்கமுடியும்.

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் குறிப்பாக வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே காணப்படுகின்ற உறவு பன்நெடுங்கால பழமை வாய்ந்ததாகும். அமெரிக்க மிஷனரிமார்களால் நிர்மாணிக்கப்பட்ட கல்விக்கூடங்கள் இன்றுவரை இலங்கையின் பல்வேறு பிரதேசங்களிலும் காணப்படுகின்றன.

ஆனால், இலங்கையின் உள்நாட்டு அரசியலில் அமெரிக்காவின் கரிசனையென்பது அமெரிக்காவின் சொந்த நலன்களை முதன்மைப்படுத்தியனவாகவே இருக்கின்றன. தற்போது இலங்கை அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையே பேச்சுக்களில் அனுசரணை வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால், அமெரிக்காவின், இலங்கையின் வடக்கு - கிழக்கு பிரச்னை தொடர்பான புதிய கரிசனையை நோக்கும்போது ஒருபுறத்தில் இலங்கையில் சீனாவின் ஊடுருவல் மற்றும் இந்து சமுத்திர பிராந்தியத்தில் தனது பாதுகாப்பு என்பவற்றை கருத்தில் கொண்டே இலங்கையின் வடக்கு - கிழக்கு பிரச்னையை அமெரிக்கா ஒரு காரணியாக எடுத்துக்கொண்டுள்ளதென்றே கருதமுடியும்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
அரசாங்கம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக இருக்கும். பொறுப்புகள் கூடும். திறமை வெளிப்படும். பொறுமை அதிகரிக்கும். வேலை தேடுபவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும்.

**இடபம்**
விடாமுயற்சி செய்து சாதகமான பலன் பெறுவீர்கள். எடுத்து கொண்ட விஷயங்களை திறம்பட செய்வீர்கள். புண்ணியச் செயல்களில் ஈடுபட்டு திருப்தி அடைவீர்கள்.

**மிதுனம்**
சாதகமான பலன் கிடைப்பதற்கு சற்று உழைப்பீர்கள். மனதில் தெளிவு ஏற்படும். உடல் ஆரோககியம் பெறும். முயற்சித்தவை சிறு தாமதத்துக்குப் பின் நல்ல முறையில் நடக்கும்.

**கடகம்**
குடும்பத்தில் மகிழ்ச்சியான கொண்டாட்டங்கள் இருக்கும். பெரியோரால் நன்மைகள் ஏற்படும். நன்றி உணர்ச்சி வெளிப்படும். பிரியமானவர்களுடன் நெருக்கம் அதிகரிக்கும். கவலை குறையும்.

**சிம்மம்**
நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்னை ஒன்று தீரும். அரசு மூலம் நடக்க வேண்டிய விஷயத்தில் இருந்த தாமதம் நீங்கும். பணியாளர்களுக்கு புதிய பதவி கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**கன்னி**
உங்கள் மேல் மற்றவர்கள் கொண்ட மரியாதை உயரும். திறமை வெளிப்படுவதால் செயல்களில் வெற்றி உண்டு. ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவீர்கள். தைரியம் கூடும்.

**துலாம்**
மனதில் இருந்த வீண் படபடப்பு அகலும். முயற்சியில் வெல்வீர்கள். எதிலும் கவனமாகச் செயலபடுவீர்கள். கருணை அதிகரிக்கும். ஊக்கமுடன் உழைப்பீர்கள். பேச்சில் கடுமை வேண்டாம்.

**விருட்சிகம்**
பேச்சின் இனிமை, சாதுாரியம் இவற்றால் வெல்வீர்கள். அமைதியாக இருப்பது நல்லது. தாயாரால் நன்மை உண்டு. கண்டிப்புடன் செயல்படுவீர்கள். எடுத்த வேலைகள் கைகூடும்.

**தனுசு**
புண்ணியச் செயலில் நாட்டம் அதிகரிக்கும். படபடப்பு வேண்டாம். தந்தையுடன் அனுசரித்து செல்லுங்கள். நீங்கள் சொல்வது பலிக்கும். அமைதியாகச் செயல்படுவீர்கள். சிக்கனம் தேவை.

**மகரம்**
நிதானமான நன்மைகள் உண்டு. மனதில் பரபரப்பு கூடும். திடீரென்று வாகனம் வாங்குவீர்கள். கலையார்வம் கூடும். உஷ்ணம் காரணமாக உடல் நலம் பாதிக்காமல் கவனம் தேவை.

**கும்பம்**
வழக்கத்தைவிட கடினமாக பணியாற்ற வேண்டி வரும். வருமானத்தில் தாமதம் இருக்கலாம். வருத்தங்கள் நீங்கும். முயற்சிகள் உடனடியாக பலன் தராமல் போகலாம்.

**மீனம்**
கூடுதலாக உழைத்து நன்மை காண்பீர்கள். மகிழ்ச்சி கூடும். வீண் அலைச்சல் உண்டாகலாம். பொறுமை தேவை. எதிலும் முழு கவனத்துடன் ஈடுபடுவது நன்மையை தரும்.

# ஈழத் தமிழருக்கு குடியுரிமை பெற்றுத்தர எம்.பி.க்களும் முயற்சிசெய்ய வேண்டும்

## வலியுறுத்துகின்றார் கி.வீரமணி

*சென்னை, ஓக. 31*

ஈழத் தமிழர்களுக்குக் குடியுரிமை பெற்றுத்தர தமிழக அரசும் எம்.பி.க்களும் முயற்சிக்க வேண்டும் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து நேற்று அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"தமிழ்நாட்டில் உள்ள இலங்கைத் தமிழர் முகாம்களில் தங்குமிடம் சரியான பராமரிப்பின்றி, அவர்களுக்குப் போதிய வசதி வாய்ப்புகளை அளிக்காது, முந்தைய ஆட்சியில் அவர்கள் எப்படியோ வாழ்ந்த நிலையை மாற்றுபவர் தமிழக முதல்வர். அவர் தமிழ்நாடு சட்டப்பேரவையில் ''ஈழத் தமிழர்கள் அநாதைகள் அல்லர்'' என்று உரத்த குரலில் முழங்கியது, அவர்களுக்கு நம்பிக்கையை ஊட்டியுள்ளது.

அகதிகள் முகாம் என்பதில் 'அகதி'யை அகற்றி, ''மறுவாழ்வு



விடுதிகள்'' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. அதன்மூலம் முதல்வர் இலங்கைத் தமிழகர்களுடனான நமது உறவு தொப்புள்கொடி உறவு என்றும் அறுந்துபடாத - அறுக்கப்பட முடியாத - அறுக்கப்படக் கூடாத உறவு என்பதையும் உறுதிப் படுத்தி உலகத்துக்கு அறிவித் துள்ளார்.

ஈழத் தமிழர்களுக்குக் குடியுரிமை பெற்றுத் தர, நமது தமிழக அரசும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் மத்திய அரசுக்கு அழுத்தம்தருவது, மனிதாபிமான அடிப்படையில் மிகமிக முக்கியமானதாகும். அதனையும் இலக்காக வைத்து அம்மக்களும் எம் மக்களே என்ற நிலையை உருவாக்குதல் முக்கியம்" என வீரமணி தெரிவித்துள்ளார்.

# விஜயகாந்த் சிகிச்சைக்காக அமெரிக்கா பயணம்

*சென்னை, ஓக. 31*

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் சிகிச்சைக்காக விமானம் மூலம் நேற்று டுபாய் ஊடாக அமெரிக்கா புறப்பட்டு சென்றார்.

சக்கர நாற்காலியில் அமர்ந்தவாறு விமானநிலையம் வந்த விஜயகாந்த் முழு உடலையும் மறைக்கும் வகையில் கோட் அணிந்திருந்து, தொப்பி, முகக் கவசம் அணிந்து முகத்தையும் மறைத்திருந்தார்.

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்திற்கு கடந்த சில வருடங்களுக்கு முன் உடல்நலக்குறைவு ஏற்பட்டது. இதனையடுத்து அவர், அமெரிக்காவில் சிகிச்சை மேற்கொண்டார். அவ்வப்போது உடல்நிலை பாதிக்கப்படுவதால் சென்னை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

உடல் நலக்குறைவு காரணமாக, கடந்த சில ஆண்டுகளாக அவர் அமெரிக்கா சென்று சிகிச்சை





பெற்று வருகிறார். இந்நிலையில், நேற்று அதிகாலை 4.00 மணிக்கு அவர் அமெரிக்கா செல்வதாக தகவல் வெளியானது. ஆனால், அதிகாலை விமானத் தில் அவர் பயணிக்கவில்லை.

இந்த நிலையில், விஜயகாந்த் சென்னை விமான நிலையத்திற்கு சக்கர நாற்காலியில் அழைத்து வரப்பட்டார். அவர், நேற்று காலை டுபாய்க்கு புறப்பட்டு சென்றார். அங்கிருந்து அவர் அமெரிக்கா செல்வார் என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# தேர்தலில் கொடுத்த வாக்குறுதிகளை தமிழக அரசு நிச்சயம் நிறைவேற்றும்

## உறுதியளிக்கிறார் தமிழக முதலமைச்சர் ஸ்டாலின்

*சென்னை, ஓக. 30*

தேர்தல் நேர வாக்குறுதிகளை நிச்சயம் இந்த ஆட்சி நிறைவேற்றும் என்று கொளத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

சென்னை கொளத்தூர், எவர்வின் பாடசாலையில் நிகழ்ச்சியில் உரையாற்றிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்ததாவது;

"இப்போது 6ஆவது முறை ஆட்சி பொறுப்பு ஏற்றிருக்கக் கூடிய தி.மு.க. ஆட்சியின் சார்பில் பல திட்டங்கள் தீட்டி நிறைவேற்றி கொடுத்து இருக்கிறோம். பெண்களுடைய முன்னேற்றம்தான் இந்த நாட்டி



னுடைய முன்னேற்றம்.

தேர்தல் நேரத்தில் பல உறுதிமொழிகளை சொல்லி இருக்கிறோம். அதில் எதையெல்லாம் நிறைவேற்றி இருக்கிறோம், எதையெல்லாம் நிறைவேற்ற போகிறோம் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். பெண் கள் பஸ்களில் பயணம் செய்யும்போது இலவசமாக பயணம் செய்யலாம்.

இப்படி பெண்களுடைய முன்னேற்றத்திற்காக தொடர்ந்து நிச்சயமாக, உறுதியாக இந்த ஆட்சி பணியாற்றும், தேர்தல் நேரத்தில் தந்திருக்கக் கூடிய வாக் குறுதிகளை எல்லாம் நிச்சயம் நிறைவேற்றும் என்ற உறுதியை மீண்டும் உங்களுக்கு எடுத்துச்சொல்கிறேன்" என அவர் தெரிவித்தார்.

# களநிலையை கருத்தில்கொண்டே ஊரடங்கு தொடர்பில் தீர்மானம்!

## அமைச்சரவை இணைப்பேச்சாளர் தகவல்

கொழும்பு, ஒக. 31

**கோவிட் -19 தொற்று என்பது சாதாரண நோயல்ல. அதிக அவதானத்துடன் செயற்படவேண்டும். தொற்றாளர்களின் எண்ணிக்கை, மற்றும் பதிவாகும் மரணங்களின் எண்ணிக்கை ஆகியவற்றை கருத்திற்கொண்டே தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை தொடர்ந்து அமுல்படுத்துவதா? அல்லது தளர்த்துவதா? என்ற தீர்மானம் எடுக்கப்படுமென அமைச்சரவை இணைப்பேச்சாளர், பெருந்தோட்டத்துதுறை அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.**



பலப்பிடிய வைத்திய சாலைக்கு கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்ட அவர் அங்கு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கோவிட்-19 வைரஸ் தாக்கத்தை ' பெருந்தொற்று ' என உலக சுகாதார ஸ்தாபனம் பிரகடனப்படுத்தியுள்ளது. மருத்துவத்துறையில் முன்னேற்றமடைந்துள்ள நாடுகளினால்கூட வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. ஆகவே கோவிட் -19 தொற்றை சாதாரண நோயென ஒருபோதும் கருத முடியாது. அனைத்து தரப்பினரும் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

கோவிட் -19 தாக்கத்தை கருத்திற் கொண்டு நாடு முழுவதும் தனிப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. சுகாதாரத் தரப்பினரது ஆலோசனைகளுக்கமையவே ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

கோவிட் -19 வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் பதிவாகும் மரணங்களின் எண்ணிக்கை ஆகியவற்றை கருத்திற் கொண்டு அமுலிலுள்ள ஊரடங்குச்சட்டத்தை தொடர்ந்து நீடிப்பதா? அல்லது தளர்த்துவதா என்ற தீர்மானம் எடுக்கப்படும்.

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதும் சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் கடுமையாக்கப்படும். மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்து குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பொதுப் போக்குவரத்து சேவைகளை மட்டுப்படுத்தப்பட்டளவில் முன்னெடுப்பது அவசியமாகும்-என்றார்.

## மரண வீட்டுக்கு சென்ற 28 பேருக்கு கொரோனா

வவுனியா, ஒக. 31

வவுனியா ஒலுமடு கிராம சேவையாளர் பிரிவில் சுகாதார விதிமுறையை மீறி இடம்பெற்ற மரணச்சடங்கு ஒன்றில் கலந்து கொண்ட 28 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

இம்மாதம் 24 ஆம் திகதி வவுனியா ஒலுமடு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள பட்டடைப் பிரிந்தகுளம் பகுதியில் மரணச் சடங்கு ஒன்று இடம்பெற்றது. இதில் சுகாதார விதிமுறையை மீறி பலர் கலந்து கொண்டனர்.

பின்னர் அவரது குடும்ப உறுப்பினர் இருவருக்கு சுகவீனம் ஏற்பட்டதனையடுத்து புளியங்குளம் வைத்தியசாலைக்கு சென்று அன்ரிஜென் பரிசோதனை மேற்கொண்டபோது இருவருக்கும் கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.

இதையடுத்து வவுனியா வடக்கு சுகாதாரப் பிரிவினரால் மரணசடங்கில் கலந்து கொண்ட நெருங்கிய உறவினர்கள் 30 பேருக்கு நேற்று அன்ரிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதில் 28 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்தி, மரணச்சடங்கில் பங்கேற்ற ஏனையவர்களை இனங்கண்டு பரிசோதனை மேற்கொள்ளவுள்ளதுடன், சுகாதார விதிமுறையை மீறியவர்கள் மீது சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவுள்ளது.



## மலையகத்தில் கடும் மழை

### நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் உயர்வு

கொழும்பு, ஒக. 31

மலைநாட்டில் கடந்த சில நாட்களாக கடும் மழை பெய்து வருகின்றது. குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் கடும் குளிருடன் சீரற்ற காலநிலை தொடர்கின்றது. தொடர் மழையால் மேல் கொத்மலை, கெனியோன், லக்ஸபான, நவலக்ஸபான, காசல்ரி, விமலசுரேந்திர, மவுசாகலை உள்ளிட்ட நீர்த்தேக்கங்களில் நீர்மட் டமும் சடுதியாக அதிகரித்து வருகின்றது.

நீரேந்தும் பிரதேசங்களில் நீர்வீழ்ச்சிகள் மற்றும் ஆறுகள் பெறுக்கெடுத்துள்ளன.

சில பகுதிகளில் கடும் காற்றுடன் மழை பெய்து வருவதால் மரங்கள் முறிந்து வீழ்ந்து, மின்சாரமும் துண்டிக்கப்பட்டுள்ளது.

ஹற்றன் பகுதியில் சில இடங்களில் நேற்று முன் தினம் இரவு முதல் நேற்று காலைவரை மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

அத்துடன், மழை தொடர்வதால் ஹற்றன்-கொழும்பு மற்றும் ஹற்றன்-நுவரெலியா வீதிகளில் பல இடங்களில் மண்திட்டுக்கள் சரிந்து வீழ்ந்துள்ளதுடன் பல இடங்களில் மண்சரிவு அபாயமும் ஏற்பட்டுள்ளன.

இதனால் இந்த வீதிகளை பயன்படுத்தும் வாகன சாரதிகள் மிகவும் அவதானமாக வாகனங்களை செலுத்துமாறு போக்குவரத்து பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சீரற்ற காலநிலையிலும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தமது தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர். சில தோட்டங்களில் மழை மற்றும் கடும் குளிர் காரணமாக தொழிலாளர்களின் வருகை மிக குறைவாக காணப்படுவதாக தோட்ட நிர்வாகங்கள் தெரிவிக்கின்றன.

## ஒரே நாளில் 14,394 பேர் குணம்

கொழும்பு, ஒக. 31

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்றுவந்த மேலும் 14,394 பேர் பூரண குணமடைந்து வைத்தியசாலைகளில் இருந்து வீடு திரும்பியுள்ளனர் என தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பூரண குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 371,992ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### குருநகர் இளைஞன் கொலை:

## பிரதான சந்தேகநபர்கள் 6 பேர் பொலிஸ் நிலையத்தில் சரண்!

யாழ்ப்பாணம், ஒக. 31

யாழ்ப்பாணம், குருநகர் இளைஞன் வெட்டிக் கொல்லப்பட்ட வழக்கில் தலைமறைவாக இருந்த கும்பலை சேர்ந்த 6 பேர் நேற்று பொலிஸாரிடம் சரணடைந்துள்ளனர்.

கடந்த 22ஆம் திகதி குருநகர் திருச்சிலுவை சுகநல நிலையத்துக்கு அண்மையாக, குருநகரை சேர்ந்த 5 இளைஞர்கள் மீது வாள்வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் படுகாயமடைந்த எட்மண்ட் ஜெரன்ஸ் (வயது-24) என்பவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் 24ஆம் திகதி உயிரிழந்தார்.

ஜெரன்ஸை தாக்கும் நோக்கத்துடன் அவரை ஏமாற்றி அழைத்து வாள்வெட்டு நடத்தப்பட்டது. இதனால் இது திட்டமிட்ட கொலையென பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

ஊரடங்கு நேரத்தில் நடத்தப்பட்ட இந்த குற்றச்சம்பவத்தை தொடர்ந்து, பாசையூரை சேர்ந்த கெமி குழு உறுப்பினர்கள் தமது மனைவி, பிள்ளைகளுடன் வீட்டை விட்டு வெளியேறி தலைமறைவானார்கள்.

கெமி குழுவே தாக்குதலை நடத்தியதாக பொலிஸாரின் விசாரணையில் தெரிய வந்ததை தொடர்ந்து, அவர்களை பொலிஸார் விரட்ட ஆரம்பித்தனர்.

பல இடங்களிலும் அவர்கள் தலைமறைவாக முயன்றும், இனிமேல் தப்ப முடியாதென்ற நிலைமையில், நேற்று பகல் பிரதான 6 சந்தேகநபர்களும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர்.

சட்டத்தரணி ஒருவர் ஊடாகவே அவர்கள் சரணடைந்துள்ளனர்.

## காணாமல் ஆக்கப்பட்டோர் நாளில் முல்லைத்தீவில் கவனவீர்ப்பு போர்!

முல்லைத்தீவு, ஒக 31

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான நேற்று தொடர்சியாக நீதி கோரிப் போராட்டம் மேற்கொண்டு வரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கொரோனா பரவல் காரணமாக விதிக்கப்பட்டுள்ள ஊரடங்கு நிலையால் முல்லைத்தீவில் தத்தமது வீடுகளிலிருந்தபடியே அடையாள கவனவீர்ப்பை மேற்கொண்டனர்.

ஒவ்வொரு வருடமும் காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் பொது இடங்களில் ஒன்றுகூடி பெருமளவில் கவனவீர்ப்புப் போராட்டங்களை மேற்கொண்டு





தமது அன்புக்குரியவர்களுக்கான நீதியை கோரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், நேற்றைய நாளில் வீட்டை விட்டு வெளியே செல்ல முடியாத நிலையிலும் தமது வீடுகளில் நீதி கோரிய வாசகங்களை சர்வதேச சமூகத்திடம் நீதி கோரிப் போராட்டம் மேற்கொண்டனர்.

"நாங்கள் இலங்கை அரசை நம்பவில்லை, சர்வதேச விசாரணையே வேண்டும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் திரும்பி வருவது எப்போது?, உங்கள் இராணுவத்தை நம்பி கையளித்த பிள்ளைகள் எப்படி காணாமலாக்கப்பட்டார்கள்?, கால அவகாசம் வேண்டாம் - முறையான நீதி விசாரணையே வேண்டும்" போன்ற வசனங்கள் அடங்கிய பதாதைகளை தாங்கி நேற்றைய சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தினத்தை அடையாளப்படுத்தி அவர்கள் கவனவீர்ப்பை மேற்கொண்டனர்.

# இலங்கையில் காணாமல்ஆக்கப்பட்டோர் உறவுகளுக்கு ஆதரவாக இருப்போம்!

## ஐக்கிய நாடுகள் சபை தெரிவிப்பு



**கொழும்பு, ஓக. 31**

**இலங்கை மற்றும் உலகளவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் மற்றும் அவர்களின் உறவுகளுக்கு ஆதரவாக இருப்போம் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.**

பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சர்வதேச தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே ஐ.நா. வதிவிட பிரதிநிதி ஹனா சிங்கர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிந்துகொள்ளும் முயற்சியில் அவர்கள் நம்பிக்கை மற்றும் விரக்திக்கு மத்தியில் காத்திருப்பதாகவும் அவர் கூறினார்.

சில நேரங்களில் பல ஆண்டுகளாக, தங்கள் அன்புக்குரியவர்கள் இருக்கும் இடம் பற்றிய செய்திகளுக்காக உறவினர்களும் குடும்பமும் காத்திருப்பதாகவும் ஹனா சிங்கர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, உண்மையை கண்டறிவதற்கான தேடல் அவர்களை ஆபத்துக்குள்ளாக்கும் என குறிப்பிட்ட அவர், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் மற்றும் நண்பர்களும் பாதுகாப்பற்ற சூழலில் வாழ்வதாகவும் கூறினார்.

குறிப்பாக குறித்த போராட்டத்தில் பெரும்பாலும் பெண்களே ஈடுபடும் நிலையில் அவர்கள் மிரட்டல், துன்புறுத்தல் மற்றும் பழிவாங்கல்களை சந்திக்க நேரிடும் என்றும் ஐ.நா. வதிவிட பிரதிநிதி குறிப்பிட்டார்.

பாதுகாப்பின்மை உணர்வு காணாமல் போனவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு மட்டுமல்ல, அவர்களின் சமூகங்கள் மற்றும் அனைத்து சமுதாயத்தையும் பாதிக்கிறது என்றும் ஹனா சிங்கர் தெரிவித்தார்.




### ஸ்புட்னிக்–V தடுப்பூசியின் ஒரு தொகுதி இன்று வரும்

*கொழும்பு, ஓக. 31*

ரஷ்யாவில் தயாரிக்கப்படும் ஸ்புட்னிக்-V தடுப்பூசியின் மேலுமொரு தொகுதி இன்று செவ்வாய்க்கிழமை நாட்டுக்கு வருகிறது.

அதன்படி, 15 ஆயிரம் ஸ்புட்னிக்-V தடுப்பூசிகள் நாட்டுக்கு கொண்டுவரப்படவுள்ளன என ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

இன்று கிடைக்கப்பெறவுள்ள இந்த தடுப்பூசி தொகை கண்டி மாவட்டத்துக்கு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, நாட்டில் இது வரை ஒரு இலட்சத்து 59 ஆயிரத்து 88 பேருக்கு ஸ்புட்னிக்-வி தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## ரிஷாத்தின் மனைவி உள்ளிட்ட நால்வருக்கும் மறியல் நீடிப்பு

*கொழும்பு, ஓக. 31*

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் மனைவி உட்பட நால்வரையும் செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும் நால்வர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனுவை மூன்றாவது முறையாகவும் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியூதீனின் கொழும்பு இல்லத்தில் பணிப்பெண்ணாக வேலைசெய்தபோது, எரிகாயங்களுக்கு உள்ளாகி பின்னர் மரணமடைந்த தலவாக்கலை- டயகமவைச் சேர்ந்த 16 வயதான உயிரிழந்த சம்பவம் தொடர்பில், அவர்கள் கைதுசெய்யப் பட்டனர்.

ரிஷாத் பதியுதீனின் மனைவி, மனைவியின் தந்தை, மனைவியின் சகோதரர் மற்றும் சிறுமியை வேலைக்கு சேர்த்த இடைத்தரகர் ஆகியோரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.



## 4,096 மெற்றிக் தொன் சீனி வத்தளையில் பதுக்கிவைப்பு

### களஞ்சியத்துக்கு உடனடியாக ‘சீல்’

*கொழும்பு, ஓக. 31*

4 ஆயிரத்து 96 மெற்றிக் தொன் இறக்குமதி செய்யப்பட்ட சீனி பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையில் பதிவு செய்யாமல் வத்தளை கெரவலப்பிட்டிப் பகுதியில் உள்ள ஒரு களஞ்சியத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது. உடனடியாக அந்தக் களஞ்சியத்துக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த களஞ்சியத்தில் பல மாதங்களாக சீனி இருப்பு இருந்தது தெரியவந்தது.-

சந்தையில் சீனியின் செயற்கை பற்றாக்குறையை உருவாக்கி, பாவனையாளர்களுக்கு அதிக விலைக்கு விற்று வரம்பற்ற இலாபம் ஈட்டுவதற்காக இறக்குமதியாளர் சீனியை இருப்பு வைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

## பந்துலவின் மனைவிக்கும் தொற்று!

*கொழும்பு, ஓக. 31*

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் மனைவிக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர் தற்போது சிகிச்சைக்காக தனியார் வைத்தியசாலை ஒன்றில் சேர்க்கப்பட்டுள்ளாரென தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமைச்சர் பந்துல குணவர்த்தனவுக்கு அண்மையில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஊரடங்கின் பலனை பெற வீட்டிலேயே இருப்போம்!

## சுகாதார அமைச்சு வலியுறுத்து

*கொழும்பு, ஓக. 31*

ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டதன் உண்மையான பலனை பெறுவதற்கு அனைவரும் வீட்டிலேயே இருக்குமாறும், இந்த செயன்முறையின் உண்மையான பலன் இவ்வாறு வீட்டில் இருப்பதன் ஊடாகவே வெளிப்படும் எனவும் சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின், பொது சுகாதார சேவைகள் உதவி பணிப்பாளர் விசேட மருத்துவர் சுசீ பெரேரா கருத்து வெளியிடுகையில்-

அத்தியாவசிய காரணங்கள் தவிர வேறு எதற்காகவும் பொதுமக்கள் வீட்டை விட்டு வெளியேறவேண்டாம்.

கொரோனா வைரஸை விடவும் டெல்டா திரிபானது மிகவும் வேகமாக பரவுகிறது.

தனிமைப்படுத்தல் ஊரடங்கை முழுமையாக கடைபிடிக்க வேண்டுமெனில், பக்கத்து வீட்டுக்கு கூட யாரும் செல்ல வேண்டாம்.

*1 அல்லது 2 மீற்றர்* தனிமனித இடைவெளியை பேணுவது கட்டாயம். அத்தோடு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முகக்கவசங்களை அகற்றவேண்டாம்- என்றார்.

## பொருளாதாரத்தை சீர்குலைப்பதற்கு குழுவொன்று நாட்டில் இயங்குகிறது

### அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் குற்றச்சாட்டு



*கொழும்பு, ஓக. 31*

ஏப்ரல் 21 தாக்குதலைப் பயன்படுத்திக் கொண்டு நாட்டில் பொருளாதாரத்தை சீர்குலைக்கும் செயல்பாட்டில் குழுவொன்று இயங்கி வருவதாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

## வவுனியா மயானத்தில் தேங்கியுள்ள சடலங்கள்

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் கொரனா தொற்றால் உயிரிழந்தர்களை எரியூட்டும் ஒரே யோர் எரிவாயு மயானமாக காணப்பட்ட வவுனியா பூந்தோட்டம் மயானம் பழுதடைந்துள்ளமையினால் சடலங்கள் எரியூட்டப்படாமல் தேங்கும் நிலை காணப்படுவதாக வவுனியா நாகரசபை தலைவர் தேசபந்து இ. கௌதமன் தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள எரிவாயு மயானம் பழுதடைந்துள்ளமை தொடர்பில அவரிடம் கேட்டபோது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வட மாகாணத்தை பொறுத்தவரையில் கொரோனா மரணங்கள் அதிகரித்த நிலையில் உள்ளன. இந் நிலையில் வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்தில் மாத்திரமே எரிவாயு மயானங்கள் இயங்கி வருகின்றன. இந்நிலையில் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களிலும் கொரோனாவால் உயிரிழப்போரின் உடல்கள் வவுனியா மயானத்திலேயே எரியூட்டப்பட்டுகின்றன.

தற்போதைய நிலையில் அதிகளவான மரணங்களால் எமது மயானம் 24 மணித்தியாலங்களும் இயங்கும் மயானமாக செயற்பட்டு வருகின்றது. இதனால் நாம் பாரிய சவால்களையும் சிரமங்களையும் எதிர்கொள்கின்றோம். எனினும் எமது மக்களுக்கான சேவையை செய்யவேண்டும் என்ற நிர்ப்பந்தமும் உள்ளது.

எனினும் அதிகளவான சடலங்களால் எமது மயானத்தின் தன்மை மற்றும் வினைத்திறன் குறைந்துசெல்கின்றது. நேற்று முன் தினம் மாத்திரம் 11 சடலங்களை எரியூட்டியிருந்தோம். காலை 8 மணியில் இருந்து மறுநாள் அதிகாலை 4 மணிவரையும் சடலங்கள் எரிக்கப்பட்டன. இதற்கும் மேலதிகமாக நேரப்பற்றாக்குறையினால் வவுனியா வைத்தியசாலையில் இன்னும் சடலங்கள் எரியூட்டப்படாமல் உள்ளன. இந்த மயானம் நேற்று காலை செயலிழந்துள்ளது. எனினும் இதனை மீள இயக்குவதற்கான முயற்சியை எடுத்து வருகின்றோம். அதனை பழுதுபார்க்க கூடியவர்கள் எவரும் வவுனியாவில் இன்மையால் கொழும்பில் இருந்தே வரவேண்டியுள்ளது.

ஒருநாள் எமது மயானம் இயங்காது விடும் பட்சத்தில் சடலங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே போகின்றது. எனவே அரசாங்கம் இவ்வாறான அனர்த்த நிலைமையில் தங்களால் செய்யக் கூடிய உதவிகளை உடன் செய்யுமாறு வேண்டுகின்றோம்-என்றார்.

ஈழநாடு



# தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு உலருணவை வழங்குவதற்கு நிதி இல்லை

## கிளிநொச்சி கூட்டுறவு சங்கங்கள் கைவிரிப்பு

கிலிநொச்சி, ஓக. 31

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது அதிகரித்துள்ள கோவிட்-19 தொற்றாளர்கள் காரணமாக அதிகளவான குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு அரசினால் 10 உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆனால், கிளிநொச்சி மாவட் டத்தில் அவற்றை தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு வழங்குவதில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாக மாவட்டத்திலுள்ள கூட்டுவறவுச் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

அதிகரித்துள்ள தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு உலருணவுப் பொருட்களை தொடர்ச்சியாக வழங்குவதற்கு எமக்கு நிதி கிடைக்க வில்லை. ஆனால், உலருணவுப் பொருட்களை வழங்குவதற்கான பட்டியல்கள் மாத்திரம் கிடைக்கப்பெற்று வருகின்றன.

மேலும் பொருட்களை வழங்குவதற்கான கூறுவிலை கோரல் எம்மிடம் பெறப் பட்டபோது காணப்பட்ட பொருட்களில்- விலைகளில் தற்போது அவை இல்லை. அனைத்து பொருட்களின் விலைகளும் அதிகரித்து விட்டன. இந்த நிலையில் நாம் தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உலருணவுப் பொருட்களை வழங்குவதில் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றோம் எனக் கூட்டுறவுச் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரனை தொடர்பு கொண்டு வினவிய போது, தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கான உலருணவுப் பொருட்களை வழங்குவதற்கான நிதியை நாம்திறைசேரியிடம் கோரியுள்ளோம். எனவே நிதி கிடைத்ததும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் எனத் தெரிவித்தார்.



# யாழ்ப்பாணத்தில் இராணுவத்தால் கட்டப்பட்ட வீடுகள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 31

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

தேசிய வெசாக் தினத்தை முன்னிட்டு புத்தசாசன அமைச்சினால் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் ஊடாக யாழ்ப்பாண மாவட்டத்தில் நான்கு வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்காக அடிக்கல் நாட்டப்பட்டு இராணுவத்தினரால் வீடு கட்டுமான வேலைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணத்தில் நடக்க விருந்த தேசிய வெசாக் தினத்தன்று வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கப்பட இருந்த நிலையில் நாட்டில் ஏற்பட்ட கொரோனா அசாதாரண நிலை காரணமாக உடுவில் மற்றும் கீரிமலைப் பகுதிகளில் அமைக்கப்பட்ட 2 வீடுகள் யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியினால் நேற்று பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

இந்த வீடு கையளிக்கும் நிகழ்வில் யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் கொடித்துவக்கு, பலாலி இராணுவ கட்டளைத் தலைமை இராணுவ அதிகாரிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# 96 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு கொழும்பு மாவட்டத்தில் கொரோனா!

கொழும்பு, ஓக. 31

கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் இதுவரையில் 96 ஆயிரத்து 454 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட் டுள்ளது.

மாவட்ட ரீதியாக இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள கொரோனா நோயாளர்கள் குறித்து சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்பு பிரிவு அறிவித்துள்ளது.

இதன்படி, கம்பஹா மாவட்டத்தில் இதுவரையில் 77 ஆயிரத்து 633 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், களுத்துறை மாவட்டத்தில் இதுவரையில், 43 ஆயிரத்து 332 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. குறித்த மூன்று மாவட்டங்களை தொடர்ந்து காலி மாவட்டத்திலேயே அதிகளவானோருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

காலி மாவட்டத் தில் இது வரையில் 22 ஆயிரத்து 996 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள் ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்பு பிரிவு அறிவித்துள்ளது.

## பொருளாதாரத்தை மேம்படுத்த

# சர்வதேச நாணய நிதியத்தின் வளங்களை பயன்படுத்துங்கள்

## இலங்கையிடம் அமெரிக்கா வலியுறுத்து

**கொழும்பு, ஓக.31**



**இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள சர்வதேச நாணய நிதியத்தை கருவியாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அரசாங்கத்திடம் அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.**

உறுதியான பொருளாதார அடித்தளத்தை உருவாக்கும் மாற்றங்களில் அரசாங்கம் ஈடுபடவேண்டும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா ரெப்லிட்ஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, அண்மையில் நிதியமைச்சருடன் இடம்பெற்ற சந்திப்பில் முதலீட்டாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் ஆபத்து தொடர்பாக விவாதித்ததாகவும் அவர் கூறினார்.

அத்துடன் இலங்கையின் பொருளாதாரம் பற்றிய கவலை தொடர்பாகவும் குறிப்பாக நாட்டின் பொருளாதாரம் தற்போது சிறந்த ஆரோக்கிய நிலையில் இல்லை என்பதை சுட்டிக்காட்டியதாகவும் அவர் தெரிவித்தார். இந்நிலையில் சர்வதேச நாணய நிதியம் வழங்கிய வளங்களைப் பயன்படுத்துவதே இதற் கான தீர்வு என தாம் நம்புவதாகவும் அமெரிக்க தூதுவர் அலெய்னா ரெப்லிட்ஸ் குறிப்பிட்டார்.

# புலம்பெயர்ந்து வசிப்பவர்களை எமக்கு முன் நிறுத்த முடியுமா?

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கேள்வி

வவுனியா, ஓக. 31

காணாமல் போனோர் புலம்பெயர்ந்து வசித்திருந்தால் அவர்களை எமக்கு முன் நிறுத்த முடியுமா என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவிடம் கேள்வி எழுப்பியுள்ளனர்.

சர்வதேச வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு வவுனியா காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப் பட்டது.

அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர்கள் இவ்வாறு கூறினர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

எமது உறவுகள் மீண்டும் கிடைப்பார்கள் என்ற நம்பிக் கையிலேயே நாம் எமது போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

எமது உறவுகள் சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு சென்று அவர்களது பெயர்களை மாற்றி வாழ்வதாக அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்திருந்தார். அப்படி இருந்தால் அவர் ஆதாரபூர்வமாக அதனை நிரூபிக்கவேண்டும். அல்லது எமக்கு முன்னால் அந்த உறவுகளை கொண்டுவந்து நிறுத்தினால் நாங்கள் இந்த போராட்டத்தை செய்யமாட்டோம்.

அவர் கூறுவது பொய்யான கருத்து. எமது போராட்டத்தை மழுங்கடிப்பதற்காகவும் சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காகவும் அவர் இப்படிசொல்கின்றார்.

எனவே இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்தி எமது உறவுகளுக்கான நீதியை பெற்றுத்தர வேண்டும். எமக்கு நீதி கிடைப்பதற்கு அனைத்து தமிழ் உறவுகளும் குரல் கொடுக்கவேண்டும். எமக்காக புலம்பெயர்நாடுகளில் போராட்டங்களை மேற்கொள்ளும் மக்களுக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

நாம் குறுகியகாலங்களில் இறந்துவிடுவோம். ஆனால், நீதியில்லாமல் இறக்கக் கூடாது. அதற்கு முன்பாக எமது உறவுகளுக்கு நீதி பெற்றுத்தர வேண்டும்-என்றார்.

# தடுப்பூசி திட்டத்தை விரிவுபடுத்துக!

## பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஓக. 31

நாட்டில் முன்னெடுக்கப் படும் தடுப்பூசித் திட்டத்தை விரிவுபடுத்தி, உடல்நலம் பாதிக்கப்பட்ட மற்றும் வெளிநாடு செல்லவிருப்பவர்களுக் கும் செலுத்துமாறு பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் கேட்டுள்ளது.

உடல்நலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு தற்காலிக நிலையங்களில் தடுப்பூசி வழங்கப் படுவது இல்லை என்றும் அவர்கள் அருகில் உள்ள வைத்தியசாலைக்கு அனுப்பப்படுகிறார்கள் என்றும் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

இருப்பினும் சில வைத்தியசாலைகளில் பிரத்தியேகமாக தடுப்பூசி வழங்குவதற்குரிய வசதிகள் இல்லை என்பதால் அவர்கள் மீண்டும் தற்காலிக நிலையங்களுக்கு திரும்பு வதாகவும் அவர் கூறினார்.

ஆகவே அனைத்து வைத்தியசாலைகளிலும் கடுமையான உடல்நலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்துவதற்கான வசதிகள் இருக்க வேண்டும் என உபுல் ரோஹண குறிப்பிட்டார்.

இதேவேளை, வெளிநாடு செல்ல விரும்புவோர் அதற்கு தேவையான ஆவணங்களை இதுவரை பெற்றுக்கொள்ளாதமையின் காரணமாக தடுப்பூசியை பெறுவதில் சிரமத்தை எதிர்கொள்வதாகவும் உபுல் ரோஹண கூறினார். ஆகவே தற்போதைய தடுப் பூசி செலுத்தும் நடவடிக்கை தொடர்பாக மீளாய்வு செய்து குறைபாடுகளை உடனடியாக நிவர்த்தி செய்யுமாறு அவர் அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார்.

ஈழநாடு

**“ போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு 12 வருடங்கள் சென்றுவிட்ட நிலையில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தொடர்ந்தும் நடை முறைப்படுத்தத் தேவையில்லை என்ற கருத்தும் வலுவடைந்து வருகின்றது. அதேபோல பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதான பலர் விசாரணைகள் பூர்த்திய டையாமல் தடுப்புக் காவலில் தொடர்ந்தும் இருக்கின்றார்கள்.**



# பயங்கரவாத தடை சட்டமும் தமிழ் அரசியல் கைதிகளும்

அகிலன்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருப்பவர்கள் குறித்து ஆராய்வதற்காக ஆலோசனை சபை ஒன்றை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்திருக்கின்றார். பயங்கரவாத நடவடிக்கைகள் சம்பந்தமாக சிறைத் தண்டனையை அனுபவித்து வருகின்றவர்கள், தடுப் புக்காவலில் வைக்கப் பட்டுள்ளவர்கள் - அதாவது அரசியல் கைதிகள் தொடர்பில் ஆராய்ந்து, அவர்களை விடுதலை செய்வதற்கான பொறிமுறை ஒன்றை கண்டறிந்து, ஜனாதிபதிக்கு இந்த சபை பரிந்துரை செய்யும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இதுதான் சொல்லப்பட்டுள்ள செய்தி. இதில் சொல்லப்படாத செய்தி என்ன இருக்கின்றது என்பதை இனிப் பார்ப்போம்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும், அந்தச் சட்டத்தின் கீழ் கைதான அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற அழுத்தங்கள் உள்நாட்டில் மட்டுமன்றி சர்வதேச ரீதியாகவும் உருவாகியிருப்பது தெரிந்ததுதான். அதிலும், போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு 12 வருடங்கள் சென்று விட்ட நிலையில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தத் தேவையில்லை என்ற கருத்தும் வலுவடைந்துவருகின்றது. அதேபோல பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதான பலர் விசாரணைகள் பூர்த்தியடையாமல் தடுப்புக் காவலில் தொடர்ந்தும் இருக்கின்றார்கள்.

இவை அனைத்துக்கும் மேலாக, ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை வழங்குவதற்கான ஒரு நிபந்தனையாக பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதை ஐரோப்பிய ஒன்றியம் முன்வைத்துள்ளது. ஜெனிவாவில் அடுத்த மாதம் இடம்பெறவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 48 ஆவது கூட்டத் தொடரிலும் இவ்விடயம் பேசப்படலாம் என்ற எதிர்பார்ப்புள்ளது. காரணம், பயங்கரவாத தடைச் சட்டத்திலுள்ள மோசமான அம்சங்களை மாற்றியமைப்பதாக அரசாங்கம் ஏற்கனவே வாக்குறுதியளித்திருந்தது. அதனால், மனித உரிமைகள் ஆணையாளர் தமது வாய்மொழி மூலமான அறிக்கையில் அதனைக் கேள்விக்கு உட்படுத்துவார் என்பது எதிர்பார்க்கப்படவேண்டியதுதான்.

ஆக, பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத் தொடர்ந்தும் வைத்துக் கொண்டிருப்பதை எந்தவகையிலும் நியாயப்படுத்தக்கூடிய நிலையில் இலங்கை அரசாங்கம் இல்லை. ஆனால், அரசுக்கு எதிராக உருவாகும் எதிர்ப்புக்களை ஒடுக்குவதற்கும், தமிழ்த் தரப்பிலிருந்து தோன்றக்கூடிய போராட்டங்களை ஒடுக்குவதற்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தொடர்ந்தும் வைத்திருப்பது அவசியம் என அரசாங்கம் கருதுவதாகத் தெரிகின்றது. நாட்டை இரும்புப் பிடிக்குள் வைத்திருப்பதற்கு இது போன்ற சட்டங்கள் அரசாங்கத்துக்குத் தேவை.



அதேவேளையில் அழுத்தங்களைச் சமாளிப்பதற்கு திருத்தங்கள் செய்யப்படும் என்ற வாக்குறுதி இலங்கை அரசால் கொடுக்கப்பட்டிருக் கின்றது. ஏற்கனவே, இவ்வாறான திருத் தங்களை ஆராய்வதற்காக குழு ஒன்று அமைக்கப்பட்டது.

தற்போது ஜனாதிபதி கைதிகளின் விடுதலை குறித்து ஆலோசனை நடத்துவதற்காக சபை ஒன்றை அமைத்திருப்பது பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கும் உத்தேசம் அரசாங்கத்துக்கு இல்லை என்பதை வெளிப்படுத்தியுள்ளது. அதுதான் இதில் சொல்லப்படாதிருக்கும் செய்தி. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதாக இருந்தால், இவ்வாறான குழு ஒன்றை அமைக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு இருந்திருக்காது. செப்ரெம்பர் மாதத்தில் ஜெனிவா கூட்டத் தொடரும் ஆரம்பமாக இருப்பதால், சர்வதேச சமூகத்தை சமாளிப்பதற்கான காய்நகர்த் தல்களை அரசாங்கம் முன்னெடுக் கின்றது என்ற கருத்தைத்தான் மனித உரிமைகள் அமைப்புக்கள் முன்வைத்துள்ளன.

**பொலிஸாருக்கு அதிகாரம்**

இலங்கையில், தமிழ் மக்களுடைய உரிமைப் போராட்டம் தீவிரமடையத் தொடங்கி - ஆயுதப் போராட்டமாக மாற்றமடைந்த போது, அதனை ஒடுக்குவதற்காக 1979 ஆம் ஆண்டு பயங்கரவாத தடைச்சட்டம் தற்காலிக ஏற்பாடாகக் கொண்டுவரப்பட்டது. பின்னர் 1982 ஆம் ஆண்டு நிரந்தர சட்டமாக்கப்பட்டு இன்றுவரை அமுலில் இருக்கின்றது. இச்சட்டமூலம் பொலிஸாருக்கு அதிகளவு அதிகாரங்களை வழங்குகின்றது. மனித உரிமைகளை மீறுகின்றவர்களைக் கூட இந்தச் சட்டம் காப்பாற்றும் என்ற கருத்தும் உள்ளது.

இந்த சட்டத்தை நீக்க வேண்டும் என்று சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், அதற்குப் பதிலாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டு வருவதற்காக இலங்கை அரசாங்கம் திட்டமிட்ட தையும் காணமுடிந்தது. இருந்த போதிலும், அதற்குத் தெரிவிக்கப்பட்ட கடு மையான அழுத்தங்கள் காரணமாக அதுவும் கைவிடப்பட்டுள்ளது. பதிலாக சில திருத்தங்களைச் செய்வதன் மூலமாக, சர்வதேச சமூகத் தின் கவனத்தை திசை திருப்புவதுதான் இலங்கை அரசின் உத்தியாகவுள்ளது என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப் பட்டுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் பல சந்தர்ப்பங்களில் பேசப்பட்டிருக்கின்றது. நல்லாட்சி அரசின் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்த போதிலும், அனைத்து அரசியல் கைதிகளையும் அவர்களால் விடுவிக்க முடியவில்லை. நல்லாட்சிக்கு சங்கடத்தைக் கொடுக்கக்கூடாது என்பதற்காக மென்போக்கிலேயே கூட்டமைப்பு அப்போது செயல்பட்டது.

**கைதிகளின் பட்டியல்**

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகிய பின்னர் இவ்விடயத்தில் பெருமளவு முன்னேற்றம் ஏற்படவில்லை. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் இது தொடர்பாக பேச்சுநடத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன், அரசியல் கைதிகள் குறித்த பெயர்ப் பட்டியல் ஒன்றையும் கையளித்திருந்தார். அந்தப் பெயர்பட்டியலுக்கு என்ன நடந்தது? அது தொடர்பில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால், இல்லை! அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால், இவ்வாறான ஒரு குழுவை நியமிக்க வேண்டிய தேவை ஜனாதிபதிக்கு ஏற்பட்டிருக்காது.

இந்த நேர நெருக்கடிகளைச் சமாளிப்பதற்காக அந்தப் பெயர்பட்டியலை பிரதமர் கேட்டுப்பெற்றுக் கொண்டார். ஆனால், அது கிடப்பில் போடப்பட்டுவிட்டதாகவே தெரிகின்றது.

இப்போது அதே போன்ற பட்டியல் ஒன்றை ஜனாதிபதி அமைத்துள்ள சபைக்கும் சுமந்திரன் அனுப்பிவைக்கப்போகின்றார். அனுப்பிவைத்த பின்னர் அந்தக் குழுவைச் சந்தித்து பேச்சுக்களை நடத்துவதற்கும் அவர் திட்டமிட்டுள்ளார். தற்போது கொரோனா முடக்கத்திலுள்ள இலங்கையின் இயல்பு நிலை எப்போது மீண்டு வரும் என்பது தெரியவில்லை. இந்த நிலையில், அரசியல் கைதிகள் விவகாரத்திலும் முக்கிய நகர்வுகளுக்கான வாய்ப்புக்களை எதிர்பார்க்க முடியாது. அதற்கு முன்னரே ஜெனிவா கூட்டத் தொடர் வந்து சென்றுவிடலாம்.

ஆனால், அரசியல் கைதிகளின் விடுதலை என்பது அரசுடன் பேசுவதன் மூலமாக, அல்லது அரசு அமைத்துள்ள சபையுடன் பேச்சுக்களை நடத்துவதன் மூலமாகவே சாத்தியமாக்க முடியும். அரசாங்கம் காலங்கடத்துவதற்காக ஒரு உபாயமாக இதனை அமைத்திருந்தாலும் கூட, சர்வதேச அழுத்தங்களும் அதிகமாகவுள்ள இன்றைய நிலையைப் பயன்படுத்தி இதனைச் சாத்தியமாக்குவதற்கு தமிழ்த் தரப்பு என்ன செய்யப்போகின்றது? ■

# ஓரணியில் திரண்ட 19 எதிர்க்கட்சிகள்! பா.ஜ.க வியூகங்களை தாக்குப்பிடிக்குமா?



**ராஜீவ் காந்தியின் பிறந்தநாளான ஓகஸ்ட் 20 ஆம் திகதி மாலை இணையவழியாக எதிர்க்கட்சிகளின் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. காங்கிரஸ் கட்சியின் இடைக்காலத் தலைவர் சோனியா காந்தி தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் ராகுல் காந்தி, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, மகாராஷ்டிரா முதல்வர் உத்தவ் தாக்கரே, தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.**

இரா.செந்தில் கரிகாலன்

**2024,** மே மாதம் நடக்கவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்காக இந்திய எதிர்க்கட்சிகள் இப்போதே ஒன்று திரள ஆரம்பித்துள்ளன. கடந்த சில மாதங்களாக எதிர்க்கட்சிகளுடன் ஒன்றிணைவதற்குத் தயக்கம் காட்டிய காங்கிரஸும் இப்போது ஓரணியில் கை கோத்திருப்பதால், தி.மு.க உள்ளிட்ட 19 எதிர்க்கட்சிகள் ஒருங்கிணைந்து பா.ஜ.க-வுக்கு எதிராக பிரமாண்டமான கூட்டணியை அமைத்திருப்பதாகக் கருதுகிறார்கள் அரசியல் பார்வையாளர்கள். அதேநேரம், இந்தக் கூட்டணி எத்தனை காலம் தாங்கும், பா.ஜ.க-வின் வியூகங்களைத் தாண்டித் தாக்குப்பிடிக்குமா... என்றெல்லாம் கேள்விகள் எழுந்துள்ளன.

ராஜீவ் காந்தியின் பிறந்தநாளான ஆகஸ்ட் 20 ஆம் திகதி மாலை இணையவழியாக எதிர்க்கட்சிகளின் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. காங்கிரஸ் கட்சியின் இடைக்காலத் தலைவர் சோனியா காந்தி தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் ராகுல் காந்தி, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, மகாராஷ்டிரா முதல்வர் உத்தவ் தாக்கரே, தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் டி.ராஜா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

“வருகிற மக்களவைத் தேர்தலுக்கு எதிர்க்கட்சிகள் இப்போதிருந்தே வியூகங்களை வகுத்து தயாராக வேண்டும். நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஒரே சிந்தனையோடு செயல்பட வேண்டும். மக்களவைத் தேர்தலுக்கு முன்னதாக வரும் ஐந்து மாநிலங்களின் பேரவைத் தேர்தல்களிலும் இதே ஒற்றுமை நீடிக்க வேண்டும்” என்று சோனியா காந்தி கேட்டுக்கொள்ள... தொடர்ந்து அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் தங்கள் கருத்துகளை முன்வைத்தனர். மேலும், இந்த எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து பா.ஜ.க அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராக செப்டம்பர் 20 முதல் 30 வரை நாடு தழுவிய போராட்டங்களை நடத்தவும் முடிவு செய்துள்ளன.

காங்கிரஸ் கட்சி இந்தக் கூட்டணியில் இணைந்தது பற்றிப் பேசும் அரசியல் பார்வையாளர்கள், “மத்திய பா.ஜ.க அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஒன்றிணைய வேண்டும் என்கிற குரல்கள் தேசத்தின் பல திசைகளிலிருந்தும் எழ ஆரம்பித்திருக்கின்றன. இதற்கான முயற்சிகளில் இறங்கியிருக்கும் பிரசாந்த் கிஷோர், இரண்டு மாதங்களுக்கு முன்பே மம்தா, சரத் பவார் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார். தொடர்ந்து ஜூன் மாதம் சரத் பவார் வீட்டில் எதிர்க்கட்சிகளின் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டும் காங்கிரஸ் கட்சி அதில் கலந்துகொள்ளவில்லை. ஆனாலும், விடாமுயற்சியாக ராகுல் காந்தியைச் சந்தித்து எதிர்க்கட்சிகள் ஒருங்கிணைய வேண்டியதன் அவசியத்தைப் பற்றி பேசினார் பிரசாந்த் கிஷோர். மம்தாவும் இதே கோரிக்கையை அப்போது வலியுறுத்தினார்.

ஆனாலும் காங்கிரஸ் கட்சியிடம், ‘யார் தலைமையில் கூட்டணி, இறங்கிப் போய் பேசுவதா, பிரதமர் வேட்பாளர் தொடர்பாக சர்ச்சைகள் எழுமா...’ என்றெல்லாம் தயக்கங்கள் இருந்தன. ஆனால், நடந்து முடிந்த பாராளுமன்றக் கூட்டத்தில் பா.ஜ.க-வின் எதேச்சதிகாரப் போக்கு, தானாகவே எதிர்க்கட்சிகளை ஓரணியில் திரளச் செய்தது. இதையடுத்துத்தான், காங்கிரஸின் தயக்கங்கள் உடைபட்டு, மெகா கூட்டணி ஏற்பட்டுள்ளது. அதன் வெளிப்பாடுதான் இப்போது நடந்து முடிந்த கூட்டம். வரும் பாராளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு மட்டுமல்ல... பிரசாந்த் கிஷோருக்கும் முக்கிய ரோல் இருக்கும்” என்றார்கள்.

காங்கிரஸ் கட்சியின் ஊடகப் பிரிவுத் தலைவர் கோபண்ணா விடம், “அடுத்த தேர்தல் வரை இந்தக் கூட்டணி நீடிக்குமா?” என்று கேட்டோம். “நிச்சயமாக நீடிக்கும். கூட்டணிக்கு யார் தலைமை ஏற்பார்கள் என்பது பற்றியெல் லாம் எங்களுக்குக் கவலையில்லை. பா.ஜ.க ஆட்சி அகற்றப்பட வேண்டும் என்பதே எங்களின் ஒரே நோக்கம். எந்த சித்தாந்தம் இந்த நாட்டில் வெற்றிபெறக் கூடாது என காந்தியும் நேருவும் நினைத்தார்களோ, அந்த சித்தாந்தம் வெற்றியைப் பெற்று ஆட்சியில் அமர்ந்திருக்கிறது. அவர்களை அகற்ற வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் இருக்கிறது. அதனாலேயே, எதிர்க்கட்சிகள் ஓரணியில் திரண்டிருக்கிறோம். இந்த ஒற்றுமை இனிவரும் காலங்களில் மேலும் வலிமைபெறும்” என்றார்.

மூத்த பத்திரிகையாளர் ராதாகிருஷ்ணனோ, “2019 பாராளுமன்றத் தேர்தலில் சரத் பவார், அகிலேஷ் யாதவ், மம்தா பானர்ஜி உள்ளிட்ட பலருக்கும் பிரதமர் கனவு இருந்தது. மக்கள், பா.ஜ.க-வைத் தூக்கி எறிந்துவிடுவார்கள் என அனைவரும் எதிர்பார்த்து காத்திருந்தனர். அதனால், எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைப்புக்காக யாரும் இறங்கவில்லை. இறுதியில் பா.ஜ.க பெரும் வெற்றியைப் பெற்றது. அதேசமயம், இப்போது கைகோத்திருக்கும் இந்தக் கூட்டணியைக் கொள்கைக்கான கூட்டணியாக நான் பார்க்கவில்லை. இனிமேல் தங்களால் அரசியல் நடத்த முடியாதோ என்கிற அச்சம் தான் இவர்களை ஓரணியில் திரளவைத்திருக்கிறது” என்றார்.





“எதிர்க்கட்சியினரின் கனவு ஒருபோதும் பலிக்காது” என்று சொல்லும் பா.ஜ.க-வின் தேசிய மகளிரணித் தலைவர் வானதி சீனிவாசன், “சவாலான ஒரு காலகட்டத்தில் பிரதமர் மோடி நாட்டை வழி நடத்திவருகிறார். தொடர்ச்சியாக எதிர்க்கட் சிகள் அவருக்கு எதிராகச் செயல்பட்டு வருகின்றன. அதில் ஓர் அங்கம்தான் இந்தக் கூட்டணியும். கடந்த பாராளுமன்றத் தேர்தலின் போதும், அதற்கு முன்பும்கூட எதிர்க்கட்சிகள் இணைந்து, கடுமையான விமர்சனங்களை வைத்தன. அப்படியிருந்தும், 2014 பாராளுமன்றத் தேர்தலைவிட 2019இல் அதிகமான இடங்களில் வெற்றிபெற்றோம். அதனால், மோடிக்கு எதிரான இவர்களின் திட்டம் ஒருபோதும் பலிக்காது” என்றார்.

இந்திய பாராளுமன்றத் தேர்தலுக்கு இன்னும் 32 மாதங்கள் இருக்கின்றன. அரசியலில் எதுவும் நடக்கலாம்! ■


# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - I,II

36. 


இந்த உருக்கள் இரண்டையும் சேர்க்கும் போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

37. பரீட்சை ஒன்றுக்குத் தோற்றிய மாணவன் ஒருவன் 15 வினாக்களுக்கு மாத்திரம் சரியாக விடை எழுதி 40 புள்ளிகளைப் பெற்றான். பரீட்சை வினாக்களில் சிலவற்றுக்கு 2 புள்ளிகளும், சிலவற்றுக்கு 4 புள்ளிகளும் வழங்கப்பட்டன எனின், அம்மாணவன் சரியாக விடை எழுதிய 2 புள்ளிகளுக்குரிய வினாக்கள் எத்தனை?


(1) 5 (2) 10 (3) 12

38. 

தரப்பட்டுள்ள அட்டைத்தாளை மடித்து ஒரு பெட்டியைச் செய்யும் போது பெட்டியின் நான்கு குற்றுக்கள் இடப்பட்ட முகத்திற்கு எதிராக உள்ள முகத்தில் காணப்படும் குற்றுக்கள் எத்தனை?

(1) 6
(2) 5
(3) 3

- நீளம், அகலம், உயரம் ஆகியன 15$cm$ வீதம் உள்ள ஒரு மரச் சதுரமுகி கீழே தரப்பட்டுள்ளது. அதன் ஒவ்வொரு பக்கத்திலும் நிறமை பூசப்பட்டு, அதிலிருந்து நீளம், அகலம், உயரம் ஆகியன 5$cm$ வீதம் உள்ள சிறிய சதுரமுகிகள் வெட்டி எடுக்கப்பட்டன. இதற்கேற்ப, 39, 40 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.




39. வெட்டி எடுக்கப்பட்ட சிறிய சதுரமுகிகள் எத்தனை?

(1) 18 (2) 27 (3) 36

40. வெட்டி எடுக்கப்பட்ட சிறிய சதுரமுகிகளில் மூன்று பக்கங்களில் மாத்திரம் நிறமை பூசப்பட்டிருந்தவை எத்தனை?

(1) 5 (2) 8 (3) 9

* * *

1. பின்வரும் பந்தியை வாசிக்க.

வனங்கள் வனப்பு மிக்கவை. உயர்ந்த மரங்களும் அடர்ந்த புதர்களும் அங்கு காணப்படும். பறவைகள் கானமிசைத்தபடி பறந்துவரும். அருவிகள் சலசலத்து ஓடும். மான்களும் எருமைகளும் நீரருந்துவதற்காக அருவிக் கரைக்கு வரும். தெளித்துவிட்ட வண்ணக் கலவை போலப் பூவினங்கள் காட்சி தரும். இது இயற்கை அன்னை நமக்களித்த கண்கவர் காட்சியாகும். வனத்தினுள் நுழைபவரைக் குளிர்காற்று வருடிச் செல்லும். அந்த வருடலோடு நாமும் வனத்தை ரசிக்க முடியும்.

- பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடையளிக்குக.
  - (i) கானமிசைப்பவை எவை? : ..............................
  - (ii) மான்களும் எருமைகளும் அருவிக் கரைக்கு வரக் காரணம் யாது? : ..............................
  - (iii) பூவினங்கள் எதைப் போலக் காட்சி தரும்? : ..............................
  - (iv) 'அழகு' என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக.: ..............................
  - (v) இங்கு தாயாகக் குறிப்பிடப்படுவது எது? : ..............................
  - (vi) வனத்தினுள் நுழைபவரை வருடிச் செல்வது யாது? : ..............................

2. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள **சரியான எழுத்துக் கூட்டல்** உள்ள சொல்லை அடைப்புக்குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
   - (i) அரசன், ஓர் ஒற்றனை (உழவு / உளவு) பார்க்க அனுப்பினான்.
   - (ii) மைதானத்தைச் சுற்றி (சிவப்பு / சிகப்பு) நிறக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

3. படர்க்கைப் பன்மை நிகழ்காலச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
   (1) உண்டது (2) ஓடுகின்றன (3) எழுதுகின்றான்

4. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.
   பின்னர் / சிறிது / உடம்புக்கு / உலவுவது / உணவு / தூரம் / நல்லது / உண்ட
   ..............................
   ..............................

5. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்துக்குப் பொருத்தமான வினைச் சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
   - (i) காலையில் சேவல் .............................. (கூவியது / கூவின)
   - (ii) காற்று வீசியதால் மரங்கள் .............................. (அசைந்தது / அசைந்தன)
   - (iii) தீமை செய்வோர் .............................. (துன்பப்படுவர் / துன்பப்பட்டனர்)
   - (iv) ஒவ்வொரு பழமொழியும் பொருட் செறிவு .............................. (மிகுந்தது / மிகுந்தவை)

# 8,166 பேரின் உயிரைப் பறித்த கொரோனாவின் 3ஆம் அலை

## நாட்டில் தொடர்கின்றது பேரவலம்

கொழும்பு, ஓக. 31

**இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தின் மூன்றாவது அலையால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 8 ஆயிரத்து 166 ஆக அதிகரித்துள்ளது.**

நாட்டில் கொரோனாத் தொற்றின் முதலாவது அலையில் 13 பேரும், இரண்டாவது அலையில் 596 பேரும் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் பெருமளவான மரணங்கள் மூன்றாவது அலையிலேயே பதிவாகியுள்ளன.

கொரோனா வைரஸ் தொற்றால் கடந்த 5 நாட்களுக்குள் மாத்திரம் 1,041 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஓகஸ்ட் 24ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரையான காலப்பகுதியிலேயே இம்மரணங்கள் பதிவாகியுள்ளன.

24ஆம் திகதி 214 பேரும், 25ஆம் திகதி 209 பேரும், 26ஆம் திகதி 214 பேரும், 27ஆம் திகதி 212 பேரும், 28 ஆம் திகதி 192 பேரும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர். (இ)



### தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய மேலும் 581 பேர் கைது

கொழும்பு, ஓக. 31

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 581 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களுடன் 85 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்நிலையில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 61 ஆயிரத்து 587 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மேல் மாகாணத்துக்கு உட்பிரவேசிக்க மற்றும் வெளியேறுவதற்கு முயற்சித்த 1792 பேர் நேற்றுமுன்தினம் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் 805 வாகனங்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. (இ)

### பொலிஸார் மீது தாக்குதல்

புத்தளம் மாவட்டம், வனாத்தவில்லுப் பகுதியில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட இருவரைக் கைதுசெய்வதற்குச் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இருவரை, பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபர் ஒருவர் தாக்கியதால் காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இருவரும் வனாத்தவில்லு பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வனாத்தவில்லு பொலிஸுடன் இணைக்கப்பட்டு சேவையாற்றி வரும் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இருவரே தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் தாக்குதலுக்குள்ளான பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இருவரும் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபரைக் கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## வவுனியாவில் மேலும் 206 பேருக்கு தொற்று

வவுனியா, ஓக. 31

வவுனியாவில் மேலும் 206 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜென் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று முன்தினம் இரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்றுப் பரவல் அடைந்துள்ள நிலையில் 206 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில், தொற்றாளர்களைக் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்தனர். (இ)

## சீரற்ற காலநிலை காரணமாக 4 மாவட்டங்களில் 848 பேர் பாதிப்பு

கொழும்பு, ஓக. 31

நான்கு மாவட்டங்களில் நீடித்த சீரற்ற மழை காலநிலை காரணமாக 191 குடும்பங்களைச் சேர்ந்த 848 பேர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலையால் மூவர் படுகாயமடைந்துள்ளதுடன் வீடொன்று முற்றுமுழுதாக சேதமடைந்துள்ளது.

கம்பஹா, கொழும்பு, இரத்தினபுரி மற்றும் காலி ஆகிய மாவட்டங்களிலேயே பாதிப்புகள் பதிவாகியுள்ளதுடன் கம்பஹா மாவட்டத்திலேயே அதிகளவான பாதிப்புகள் பதிவாகியுள்ளன.

கம்பஹா மாவட்டத்தில் அத்தனகல்ல மற்றும் ஜாஎல ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் 152 குடும்பங்களைச் சேர்ந்த 730 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் கடுவெல பிரதேசத்தில் 30 குடும்பங்களைச் சேர்ந்த 92 பேரும், இரத்தினபுரி மாவட்டத்தில் குருவிட்ட பிரிவில் 7 குடும்பங்களைச் சேர்ந்த 22 பேரும், காலி மாவட்டத்தில் வதுரம்ப பிரிவில் 2 குடும்பங்களைச் சேர்ந்த நான்கு பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். (இ)

## 25 எம்.பிக்களுக்கு கொரோனா!

கொழும்பு, ஓக. 31

ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அசங்க நவரத்னவுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பாராளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

அதேவேளை, இலங்கையில் கொரோனா வைரஸ் பரவ ஆரம்பித்த நாளிலிருந்து தற்போது வரை 25 பாராளுமன்ற உறுப்பினர்கள் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் இதுவரை பாராளுமன்ற உறுப்பினர்களான அமைச்சர் பந்துல குணவர்த்தன, ஜனக வக்கும்புர மற்றும் அசங்க நவரத்ன ஆகியோர் மாத்திரமே சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)



## குடைசாய்ந்தது லொறி!

### சாரதியின் உதவியாளர் படுகாயம்

டிக்கோயா, ஓக. 31

ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதி, குடாகம பிரதேசத்தில் லொறியொன்று குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் அதன் சாரதியின் உதவியாளர் படுகாயமடைந்த நிலையில் டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மொரட்டுவையிலிருந்து தலவாக்கலை பூண்டுலோயா நோக்கி, 20 தொன் விறகுகளைக் கொண்டு சென்ற லொறியே இவ்வாறு குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

வேகக்கட்டுப்பாட்டை இழந்து லொறி விபத்துக்குள்ளாகியுள்ளது எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த லொறியில் லொறியின் சாரதி, சாரதியின் உதவியாளர் மற்றும் ஒருவர் பயணித்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

இந்த விபத்து தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## தடுப்பூசி செலுத்தும் பணிகளை பெருந்தோட்டத்தில் துரிதப்படுத்துக

### சுகாதார அமைச்சரிடம் இராதாகிருஷ்ணன் எம்.பி. கோரிக்கை

நுவரெலியா, ஓக. 31

மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் கொரோனாவுக்கான தடுப்பூசித் திட்டத்தைத் துரிதப்படுத்தி மக்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடம், மலையக மக்கள் முன்னியின் தலைவர் இராதாகிருஷ்ணன் எம்.பி. கோரிக்கை விடுத்துள்ளார்.

அமைச்சர் கெஹலியவுக்கும் இராதாகிருஷ்ணன் எம்.பிக்கும் இடையில் நேற்று தொலைபேசி கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போதே மேற்படி கோரிக்கையை எம்.பி. விடுத்துள்ளார்.



"மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் தடுப்பூசி ஏற்றும் பணி மந்தகதியிலேயே இடம்பெற்று வருகின்றது. தடுப்பூசி ஏற்றப்படும் இடங்களுக்கும் போதுமானளவு தடுப்பூசிகள் வருவதில்லை" எனவும் இராதாகிருஷ்ணன் எம்.பி. சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் மத்திய மாகாண சுகாதாரப் பணிப்பாளருக்கு தெரியப்படுத்துவதாகவும், தேசிய அடையாள அட்டை இல்லாமல் தடுப்பூசி போடத் தவறியவர்களுக்குத் தோட்ட நிர்வாகத்தின் கடிதத்துடன் அல்லது கிராமசேவகர் உறுதிபடுத்தல் கடிதத்துடன் தடுப்பூசியை ஏற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்புகளுக்குத் தெரியப்படுத்துவதாகவும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இதன்போது உறுதிப்படுத்தியுள்ளார். (இ)



குருதி கொடை மூலம்

## 88 உயிர்களை காத்த நாய் ஓய்வு பெற்றது!

22 தடவைகள் குருதிக் கொடை செய்து 88 நாய்களின் உயிர்களை காப்பாற்ற உதவிய வுட்டி என்ற நாய் இரத்த தானம் செய்வதில் இருந்து ஓய்வு பெற்றது.

க்ரேஹௌண்ட் வகை நாயான வுட்டி பிரிட்டனின் லேஸ்சர்ஷர் நகரைச் சேர்ந்தது. இது தனது மூன்றே முக்கால் வயதில் குருதிக் கொடை செய்யத் தொடங்கியது.

செல்லப் பிராணிகள் இரத்த வங்கி ஐக்கிய இராச்சியம் எனும் தன்னார்வ அமைப்பு, ஒரு நாயின் உடலில் இருந்து ஒரு முறை 450 மில்லி இரத்தம் எடுக்கப்பட்டால் அதன் மூலம் நான்கு நாய்களின் சிகிச்சைக்கு உதவ முடியும் என்று குறிப்பிட்டுள்ளது. க்ரேஹௌண்ட் வகை நாய்களின் இரத்தம் பெரும்பாலும் 'நெகட்டிவ்' வகை இரத்தமாக இருப்பதால் இந்த வகை நாய்களின் இரத்தத்துக்கு பெரும்பாலும் தட்டுப்பாடு உள்ளது.

இந்த இரத்தத்தை அவசர காலங்களில் எந்த நாய்க்கு வேண்டுமானாலும் உடலில் செலுத்தலாம் என்றும் தெரிவித்துள்ளது. 30% நாய்களுக்கு மட்டுமே நெகட்டிவ் இரத்தப் பிரிவு இருக்கும் என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

வுட்டி இறுதியாக குருதிக் கொடை செய்த பின் அதற்கு பிடித்த உணவுகள், பொம்மைகள், ஷம்போ என்பன வழங்கப்பட்டன.

ஒரு வயது முதல் எட்டு வயதுக்கு உள்பட்ட நாய்களின் உடலில் இருந்து மட்டுமே இரத்தம் எடுக்க முடியும் என்பதால் தற்போது எட்டு வயதை கடந்து வுட்டியால் மேலதிகமாக குருதிக் கொடை செய்ய முடியாது.

வுட்டி குருதிக் கொடை வழங்குவதில் எப்பொழுதுமே மகிழ்ச்சியாகவே இருந்ததாக இதன் உரிமையாளர் வெண்டி க்ரே தெரிவித்தார். (ஐ)

# நாட்டைவிட்டு வெளியேற விரும்பும் ஆப்கானியர்களை அனுமதியுங்கள்

## தலிபான்களிடம் 90 நாடுகள் கூட்டாக கோரிக்கை

நியூயோர்க், ஓக. 31

ஆப்கானிஸ்தானில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் மற்றும் நாட்டை விட்டு வெளியேற விரும்பும் ஆப்கானியர்களுக்கு தலிபான்கள் எந்தத் தடையும் விதிக்கக் கூடாது என்று 90 நாடுகள் கூட்டாகக் கோரியுள்ளன.

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறத் தொடங்கிய சூழ்நிலையைப் பயன்படுத்தி தலிபான்கள், ஆப்கானிஸ்தானை முழுமையாகக் கைப்பற்றியுள்ளனர். அத்துடன், ஆட்சி அமைக்கவும் அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். இந்த நிலையில், அங்கிருந்து வெளி நாட்டவர்களும், ஆப்கானியர்களும் வெளியேறி காபூல் விமான நிலையம் மூலம் வெளியேறுகின்றனர்.

இந்த நிலையில், அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் உட்பட 90 நாடுகள் சேர்ந்து கூட்டாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள் ளனர்.

அதில், "ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேற நினைப்பவர்களைத் தடுக்க மாட்டோம் என்று தலிபான்கள் அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும். ஆப்கானிஸ்தானில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் மற்றும் அந்நாட்டை விட்டு வெளியேற விரும்பும் ஆப்கானியர்களுக்கு தலிபான்கள் எந்தத் தடையும் விதிக்கக் கூடாது என்று கூறப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டறிக்கையில், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, நியூசிலாந்து, சுவிற்சர்லாந்து, உக்ரைன் உள்ளிட்ட பல நாடுகளின் பிரதிநிதிகள் கையெழுத்திட்டுள்ளனர். (ஐ)



## காபூல் விமான நிலையம்மீது ஏவுகணைகளால் தாக்குதல்!

### 4 சிறுவர்கள் உட்பட 6 பேர் மரணம்

காபூல், ஓக. 31

காபூல் விமான நிலையத்தை இலக்கு வைத்து நேற்று ஏவுகணை தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதில் ஒன்று அயலிலுள்ள வீடு ஒன்றின் மீது வீழ்ந்து வெடித்ததில் 4 சிறுவர்கள் உட்பட 6 பேர் உயிரிழந்தனர். ஒரு பெண் உட்பட 3 பேர் படுகாயம் அடைந்தனர்.

இந்தத் தாக்குதலுக்கு எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. எனினும், குண்டுவெடிப்பு தாக்குதலை நடத்திய ஐ. எஸ். கோரசன் பயங்கரவாதிகளே ஏவுகணை தாக்குதலையும் நடத்தியிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

இதேசமயம், விமான நிலையத்தை நோக்கி வந்த ஐந்து ஏவுகணைகளை அமெரிக்காவின் ஏவுகணை எதிர்ப்பு சாதனம் மூலம் முறியடிக்கப்பட்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

முன்னதாக, கடந்த வியாழக்கிழமை காபூல் விமான நிலையத்தில் நடத்தப்பட்ட தற்கொலை தாக்குதல்கள், துப்பாக்கி சூட்டு சம்பவங்களில் 180இற்கும் மேற்பட்டோர் பலியாகியிருந்தனர். இதைத் தொடர்ந்து இன்னமும் 36 மணி நேரத்தில் காபூல் விமான நிலையம் தாக்கப்படலாம் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எச்சரிக்கை விடுத்த 24 மணி நேரத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அமெரிக்கா தாக்குதல்; 7 பயங்கரவாதிகள் பலி!

காபூல், ஓக. 31

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா நடத்திய விமான தாக்குதலில் 10 பேர் உயிரிழந்தனர். இவ்வாறு உயிரிழந்தவர்களில் காபூல் விமான நிலையம் மீது தற்கொலை தாக்குதல் நடத்த வந்தவர்கள் கொல்லப்பட்டனர் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

காபூல் விமான நிலையத்தின் மூலம் மக்கள் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். இந்த நிலையில் அங்கு கடந்த வியாழக்கிழமை தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அத்துடன், வேறு தாக்குதல் முயற்சிகளுகம் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில், நேற்று ஆளில்லா விமானங்கள் மூலம் நேற்று அமெரிக்கா தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் சிறுவர்கள் உட்பட 10 பேர் பலியாகினர் என்று உள்ளூர்வாசிகள் தெரிவித்தனர். ஆனால், இதில் 7 பேர் விமான நிலையம் மீது தாக்குதல் நடத்த வந்த ஐ. எஸ். பயங்கரவாதிகளும் உள்ளனர் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. (ஐ)



## ஆப்கானிஸ்தானிலிருந்து இன்று அமெரிக்க படைகள் வெளியேறும்

ஆப்கானிஸ்தானிலிருந்து இன்று செவ்வாய்க்கிழமை அமெரிக்க படைகள் முழுமையாக வெளியேறுகின்றன.

இதைத் தொடர்ந்து, ஆப்கானிஸ்தானில் கடந்த 20 ஆண்டுகளாக போர் மற்றும் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டு வந்த அமெரிக்க படைகளின் பிரசன்னம் நிறைவுக்கு வருகின்றது.

கடந்த ஜனவரி மாதம் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற ஜோ பைடன் ஓகஸ்ட் 31ஆம் திகதிக்கு முன்பாக அமெரிக்க படைகள் வெளியேறும் என்று அறிவித்திருந்தார்.

அமெரிக்க படைகள் வெளியேற ஆரம்பித்ததை தொடர்ந்து அந்த நாடு விரைவாக தலிபான்கள் கைக்குள் அகப்பட்டது. இதைத் தொடர்ந்து அந்த நாட்டிலிருந்து வெளியேற விரும்பும் மக்களை காபூல் விமான நிலையம் மூலமாக நேட்டோ படைகள் முன்னெடுத்தன. கனடா, பிரிட்டன் படைகள் வெளியேறியதைத் தொடர்ந்து தற்போது அதெரிக்க படைகள் நிலைகொண்டுள்ளன.

இந்த நிலையில், சனிக்கிழமை அமெரிக்க இராஜதந்திரிகள் நாட்டிலிருந்து வெளியேறினார். இதே சமயம் எஞ்சியுள்ள அமெரிக்க படையினர் இன்றுடன் நாடு திரும்புவர். (ஐ)

## ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறியது பிரிட்டன்!


லண்டன், ஓக. 31

ஆப்கானிஸ்தானில் 20 ஆண்டுகால நடவடிக்கையை முடித்துக் கொண்டு, அந்த நாட்டிலிருந்து பிரிட்டன் படையினர் தாயகம் திரும்பினர்.

ஆப்கானிஸ்தானில் இருந்த கடைசி வீரர்களையும் ஏற்றிக் கொண்டு காபூல் விமான நிலையத்திலிருந்து சனிக்கிழமை இரவு புறப்பட்ட பிரிட்டன் விமானம், ஒக்ஸ்ஃபோர்ட்ஷெயர் நகரிலுள்ள விமானப் படைதளத்தை ஞாயிற்றுக்கிழமை வந்தடைந்தது. அந்த விமானத்தில், ஆப்கானிஸ்தானுக்கான பிரிட்டன் தூதர் சர் லாரீ பிரஸ்டோவும் இருந்தார்.

இதுகுறித்து பிரதமர் பொறிஸ் ஜோன்சன் வெளியிட்ட காணொலியில், "வாழ்நாளில் இதுவரை காண்டிராத, சிரமம் நிறைந்த வெளியேற்றப் பணிகள் கடும் நெருக்கடிக்கிடையே முடிவுக்கு வந்தன - என்றார். (ஐ)



## ஏமனில் போராளிகள் தாக்குதல் 30 இராணுவத்தினர் உயிரிழப்பு!

சனா, ஓக.31

ஏமன் ஹவுதி போராளிகள் நடத்திய ஏவுகணை தாக்குதலில் 30 இராணுவத்தினர் பலியாகினர்.

அரச படைகளுக்கும் ஹவுதி போராளிகளுக்கும் இடையே ஏமனில் கடந்த 2014ஆம்ஆண்டு முதல் உள்நாட்டு போர் நடக்கிறது.

இந்த நிலையில் ஏமன் இராணுவ தளம் மீது நேற்று முன்தினம் நடத்தப்பட்ட ஆளில்லா விமானம், ஏவுகணை தாக்குதல்களில் 30 இராணுவத்தினர் பலியாகினர். 65 பேர் காயமடைந்தனர். படுகாயமடைந்த பலரின் நிலை மிகமோசம் என்பதால் உயிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று தெரவிக்கப்பட்டது. (ஐ)

# இலங்கைக்கு முதல் தங்கம்! தினேஷ் பிரியந்த சாதனை!!

ரோக்கியோ, ஒக. 31

பரா ஒலிம்பிக் வரலாற்றிலேயே இலங்கை முதன்முறையாக நேற்று தங்கப் பதக்கம் வென்றது. இதனை வென்ற 35 வயதான தினேஷ் பிரியந்த ஹேரத் முதியன்செலன்கே ஈட்டி எறிதலில் புதிய உலக சாதனையையும் படைத்தார்.

பரா ஒலிம்பிக் போட்டிகள் ஜப்பான் தலைநகர் ரோக்கியோவில் நடக்கின்றன. இதில் நேற்று ஈட்டி எறிதல் - பிரிவு 46 போட்டி நடந்தது.

இதில் பங்கேற்ற தினேஷ் பிரியந்த மூன்றாவது முயற்சியில் 67.79 மீற்றர் தூரத்துக்கு ஈட்டியை எறிந்தார்.

இவருடன் போட்டியிட்ட இந்திய வீரரான தேவந்திர, குர்ஜார் ஆகியோர் முறையே வெள்ளி, வெண்கல பதக்கங்களை வென்றனர்.

இந்தப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற 2016 ரியோ ஒலிம்பிக்கில் ஈட்டி எறிந்த 63.97 மீற்றர் தூரமே முன்னர் உலக சாதனையாக இருந்தது. அதை, தினேஷ் பிரியந்த முறியடித்துள்ளார்.




தினேஷ் பிரியந்த இராணுவத்தில் இருந்தபோது 2008ஆம் ஆண்டு கையில் காயமடைந்தார். இதைத் தொடர்ந்து அவர் களத்தை விட்டு அகற்றப்பட்டார். காயத்திலிருந்து குணமடைந்த உடனேயே தடகள விளையாட்டை அவர் தெரிவு செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## கிளீவ்லாந்து ரென்னிஸ்: சானியா இணை தோல்வி!

கிளீவ்லாந்து, ஒக. 31

கிளீவ்லாந்து பகிரங்க ரென்னிஸின் இரட்டையர் இறுதியாட்டத்தில் போட்டியில் ஜப்பானின் ஷூகோ அயோமா, இனா ஷிபஹாரா இணை சம்பியன் வென்றது. இதனால், சானியா இணை தோல்வியடைந்தது.

கிளீவ்லாந்து பகிரங்க ரென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடந்தது. இதில், இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சானியா மிர்ஸா, அமெரிக்காவின் கிறிஸ்ரினா இணை, ஜப்பானின் ஷூகோ அயோமா, இனா ஷிபஹாரா இணையை எதிர் கொண்டது.

முதல் செற்றில் இரு இணைகளும் கடுமையாக மோதின. எனினும், இந்த செற்றை 5-7 என்ற கணக்கில் சானியா இணை தோற்றது. இரண்டாவது செற்றையும், 3-6 என்ற கணக்கில் அந்த இணை இழந்தது. (ஐ)



## பாரிஸ் கழக அணிக்காக களமிங்கினார் மெஸ்ஸி!

ரெய்ம்ஸ், ஒக. 31

லயனல் மெஸ்ஸி பாரிஸ் சென். ஜெர்மைன் அணிக்காக நேற்று முன்தினம் களமிறங்கினார். எனினும் 66ஆவது நிமிடத்திலேயே அவர் இந்தப் போட்டியில் களமிறங்கினார்.

இந்தப் போட்டியில் பாரிஸ் அணி 2-0 என்ற கணக்கில் ரெய்ம்ஸ் அணியை வெற்றி கொண்டது. ஆனாலும், 2 கோல்களும் அடிக்கப்பட்ட பின்னரே மெஸ்ஸி மைதானத்துக்குள் நுழைந்தார். அவர் மைதானத்தில் களமிறங்கியபோது, 30ஆம் இலக்க சீருடையை அணிந்திருந்தார். பார்ஸிலோனா அணிக்கு அல்லாமல் மெஸ்ஸி களமிறங்கிய முதல் போட்டி இதுவாகும்.

அவரின் அறிமுகப் போட்டியாக இது அமைந்தபோதும், பாரிஸ் அணியில் ஏற்கனவே விளையாடி வரும் எம்பாப்பே 16, 63ஆவது நிமிடங்களில் கோல்களை அடித்தார். பாரிஸ் அணியிலிருந்து வெளியேறும் அவர் அந்த அணிக்காக அடித்த இறுதிக் கோல்கள் இவையாகும். (ஐ)

## நான்காவது டெஸ்டுக்கான இங்கிலாந்து அணி தயார்!

லண்டன், ஒக. 31

இந்திய அணிக்கு எதிரான நான்காவது டெஸ்ட் போட்டிக்கான இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. 3 போட்டிகள் நிறைவடைந்த நிலையில், இந்தத் தொடரில் 1-1 என்ற கணக்கில் இரு அணிகளும் சம நிலையில் உள்ளன.

நான்காவது போட்டி செப். 2ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்த நிலையில், 15 பேர் கொண்ட அணியை இங்கிலாந்து அறிவித்துள்ளது.

அணி விவரம்: ஜோ ரூட் (அணித் தலைவர்), மொயின் அலி, ஜேம்ஸ் அண்டர்சன், ஜொன்னி பெயர்ஸ்ரோ, சாம் பில்லிங்ஸ், ரொறி பேர்ண்ஸ், சாம் கரன், ஹசீப் ஹமீத், தொன் லோரன்ஸ், டேவிட் மலன், கிரேக் ஓவர்ரன், ஒல்லி போப், ஒல்லி ரொபின்சன், கிறிஸ் வோக்ஸ், மார்க் வூட். (ஐ)

## ஐ.பி.எல்லிலிருந்து விலகினார் சுந்தர்

பெங்களூர், ஒக. 31

ஐ.பி.எல். தொடரிலிருந்து வாஷிங்டன் சுந்தர் விலகியுள்ளார். பயிற்சியின்போது ஏற்பட்ட காயம் காரணமாகவே அவர் தொடரிலிருந்து விலகியுள்ளார்.

இந்திய அணியை பிரதிநிதித்துவம் செய்யும் அவர், ஐ.பி.எல். தொடரில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார்.

இந்த நிலையில், தொற்று பரவலால் நிறுத்தப்பட்ட ஐ.பி.எல். இருபது - 20 தொடரின் மீதி போட்டிகள் செப். 19ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஆரம்பமாகிறது. இந்த நிலையிலேயே அவர் தனது விலகலை அறிவித்துள்ளார். (ஐ)





## மன்செஸ்டர் அணியில் மீண்டும் றொனால்டோ!

லிஸ்பன், ஒக. 31

கிறிஸ்ரியானோ றொனால்டோ, மீண்டும் மன்செஸ்டர் யுனைடெட் அணியில் இணைந்துள்ளார்.

போர்த்துக்கல் நாட்டின் உதைபந்தாட்ட அணித் தலைவரான றொனால்டோ இத்தாலியின் யுவன்ட்ஸ் கழகத்தில் விளையாடி வந்தார். 2018ஆம் ஆண்டு இந்த அணியில் இணைந்த அவர் 134 போட்டிகளில், 101 கோல்கள் அடித்துள்ளார்.

இந்த நிலையில், மன்செஸ்டர் யுனைட்டெட் அணியில் அவர் மீண்டும் இணைந்துள்ளார். இதற்கான மருத்துவ ஒப்பந்தத்தில் அவர் நேற்று கைச்சாத்திட்டார்.

அவருக்கு வருடாந்தம் 2.3 கோடி ஸ்ரேலிங் பவுண்ஸ்களை - சுமார் 621 கோடி இலங்கை ரூபாயை ஊதியமாக வழங்க அந்த அணி ஒப்புதல் அளித்துள்ளது.

இவர் முன்னதாக, 2003 - 2009 வரை மன்செஸ்டர் யுனைட்டெட் அணிக்காக விளையாடினார். அக்காலத்தில் 196 போட்டிகளில், 84 கோல்கள் அடித்த இவர், 8 கிண்ணங்களை அந்த அணிக்காக வென்று கொடுத்தார்.

இதேசமயம், மன்செஸ்டர் யுனைட்டட் அணி ருவிட்டர் பதிவில், "கிறிஸ்டியானோ றொனால்டோ மீண்டும் வருக," என, தெரிவித்திருந்தது.

றொனால்டோ தனது பதிவில், "இத்தாலியின் மிகப்பெரிய கழக அணியிலிருந்து விடை பெறுகிறேன். யுவன்டஸ் அணிக்காக என் இருதயத்தையும், ஆன்மாவையும் கொடுத்தேன். என் இறுதி நாள் வரை டுரின் நகரத்தை நேசிப்பேன்," என்றார். (ஐ)

# உலக சாதனை படைத்த தினேஷ் பிரியந்த ஹேரத்துக்கு ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் வாழ்த்துகள்

கொழும்பு, ஓக. 31

2020 டோக்கியோ பாராலிம்பிக்கில் உலக சாதனையுடன் தங்கப் பதக்கத்தை வென்ற இலங்கை வீரர் தினேஷ் பிரியந்த ஹேரத்துக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ச மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோர் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

ஜப்பான் டோக்கியோ நகரில் தற்போது நடைபெற்று வரும் 16ஆவது பாராலிம்பிக்கில் இலங்கை சார்பில் போட்டியிட்ட தினேஷ் பிரியந்த ஹேரத், ஈட்டி எறிதல் போட்டியில் உலக சாதனையுடன் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.

வரலாற்றில் முதன் முறையாக இலங்கைக்கு இவ்வாறாக தங்கப் பதக்கம் கிடைத்துள்ளது.

இந்த வெற்றிக்கு ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

அந்தவகையில், “இலங்கைக்கு தங்கப் பதக்கத்தை வெற்றியீட்டித் தந்த இராணுவ வீரரான தினேஷ் பிரியந்த ஹேரத்துக்கு, எனது மனமார்ந்த வாழ்த்துக்களைக் கூறிக் கொள்கின்றேன்” என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ தெரிவித்துள்ளார்.

மேலும, தாய் நாட்டைக் கொடூரமான பயங்கரவாதத்திலிருந்து காப்பாற்றுவதற்கும் இம்முறை சர்வதேச விளையாட்டு வரலாற்றின் பொன்னெ




ழுத்துக்களில் இலங்கையின் பெயரை எழுதுவதற்கும் நீங்கள் அளிக்கும் அர்ப்பணிப்புக்கு மீண்டும் மீண்டும் ஒட்டுமொத்த இலங்கை மக்களின் சார்பாகவும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தங்கப் பதக்கத்தை வென்று நாட்டுக்குக் கௌரவத்தை ஏற்படுத்திக் கொடுத்த தினேஷ் பிரியந்த ஹேரத்துக்கு தனது வாழ்த்துகளைக் கூறிக்கொள்வதாக பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ தெரிவித்துள்ளார்.

ஏற்கவே 2016ஆம் ஆண்டு பாராலிம்பிக்கில் நாட்டுக்கு வெண்கலப் பதக்கத்தை வென்று கொடுத்த இவர் இம்முறை தங்கத்தை வென்று உலக சாதனை புரிந்துள்ளமையை வாழ்த்துவதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

அத்துடன், ”தங்கம் வென்று நீங்கள் இலங்கை தாய்நாட்டை பெருமைப்படுத்தியுள்ளீர்கள். உங்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்” என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்‌ஷ வீடியோ மூலம் தினேஷ் பிரியந்த ஹேரத்தைத் தொடர்பு கொண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். (இ)

## வெளிநோயாளர் சிகிச்சை பிரிவுக்கு வந்த 39 பேருக்கு கொரோனா தொற்று

காலி, ஓக. 31

காலி, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுக்கு சிகிச்சைக்காக நேற்று வந்த 39 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த பிரிவுக்கு சிகிச்சைக்காக வந்த 194 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையில் 39 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனக் கராப்பிட்டிய வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்தியர் செல்ட்டன் பெரேரா ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

மேலும் 46 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 24 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தொற்றுக்குள்ளானவர்களில் வைத்தியசாலையின் ஊழியர் கள் இருவரும் உள்ளடங்குகின்ற னர் என்று அவர் மேலும் கூறியுள்ளார். (இ)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 29 - 10 - 1948



உதிர்வு 31 - 08 - 2020

அமரர் அருளப்பு அருள்ராசா

உயிர் தந்த உத்தமரே
உழைப்பால் உயர்ந்தவரே
கண்ணிமையில் எம்மை காக்கும் - நீ
கடவுள் தரும் பெரும் சொத்தல்லவோ
நிலையற்ற இந்த பூமியில் நிறைவாய் வாழ்ந்து,
எம்மையும் எல்லோரையும் மகிழ்வித்து,
எம்மோடு கூடிகுழாவி,
நாம் எதிர்பாரத தரணத்தில்
எம்மை விட்டுவிட்டு இறைவனடி சென்று
ஓராண்டாகி விட்டதப்பா
உங்கள் மீது நாம் கொண்ட பாசம்,
இந்த ஜென்மத்தில் மாறாத நேசம்,
எப்போதும் நாம் உங்கள் சுவாசம்,
எங்கு சென்றாலும் நம்மை விட்டு
விலகாது உங்கள் பாசம்

தொடர்புகளுக்கு: ஜெனாத் - 0773047493
தகவல்: குடும்பத்தினர்

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி; சர்வதேச விசாரணை கட்டாயம் தேவை

### சிவாஜிலிங்கம் வலியுறுத்து



**யாழ்ப்பாணம், ஓக.31**

**“சர்வதேச ரீதியான விசாரணைகள் மூலம்தான் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்க முடியும். அதனைப் பெறுவதற்கு நாங்கள் முனைப்புக் காட்ட வேண்டும்.”**

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் வலியுறுத்தினார்.

நேற்று உலக காணமல் ஆக்கப்பட்டோர் தினமாகும். அதையொட்டி அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

“இதுவரை தமிழ்த் தரப்பில் இருந்து கட்டாயமாகக் காணாமல் செய்யப்பட்டோரின் எண்ணிக்கை சுமார் 20 ஆயிரம் என ஐ.நா. மனித உரிமைகள் சபைக்குக் கிடைத்த புகார்களின் அடிப்படையில் தெரிவிக்கப் படுகின்றது.

இந்த எண்ணிக்கை இன்னும் சற்று அதிகமாக இருக்கலாம். போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது வடக்கு, கிழக்கின் பல இடங்களிலே 600 பேருக்கு மேற்பட்டோர் காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள்.

1996ஆம் ஆண்டில் காணாமல் ஆக்கப்பட்டோர் புதைக்கப்பட்டு இருக்கிறார்கள் என்று அஞ்சப் படுகின்ற சூழ்நிலையிலேதான் 2009ஆம் ஆண்டு போர் முடி வுக்கு வந்ததன் பின் சுமார் 6 ஆயிரத்து 500 பேரை இராணுவத்தினரிடம் அவர்களது மனைவிமாரோ, பெற்றோரோ, சகோதரர்களோ கையளித்தவர்களைப் பற்றி கூட இன்னும் எந்தவிதமான தகவல்களும் இல்லை.

இந்தச் சூழ்நிலையின் பின்தான் இவர்களைக் கண்டுபிடிக்க எத்தனை குழுக்களை நியமித்து இருந்தாலும் அதிலிருந்து அரச தரப்பினர் பின்வாங்கினார்கள்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலே 30/1 என்ற தீர்மானத்தை 2015 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி நிறைவேற்றுவதற்கு இணை அனுசரணை வழங்கியதாக இலங்கை அரசு சொன்னாலும் அதன் பிறகு அவர்கள் பின்வாங்கினார்கள். இந்தச் சூழ்நிலையில்தான் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தங்களுடைய உறவுகளைத் தேடி வருடக் கணக்கில் அலைந்து கொண்டு இருக்கிறார்கள். இன்றைக்கு ஏறக்குறைய 2 ஆயிரம் நாட்கள் வீதிகளில் இருந்து போராடி வருகிறார்கள்.

சர்வதேச ரீதியான விசாரணைகள் மூலம்தான் நீதி கிடைக்க முடியும். அதனைப் பெறுவதற்கு நாங்கள் முனைப்புக்காட்ட வேண்டும். சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் போர்க் குற்றவாளிகளை நிறுத்தாத வரை இதற்கான நீதி கிடைக்க வாய்ப்பில்லை. இல்லாவிட்டாலும் கூட அதை நோக்கிப் பயணிக்கின்ற விசாரணைகள் மூலம் இந்த விடயம் தெரியப்படுத்தப்பட்டு, கண்டுபிடிக்கப்பட்டு அவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும்” - என்றுள்ளது. (இ - 03)

# இந்தியா-இலங்கைக்கு இடையிலான விமான சேவை ஆரம்பிக்க நடவடிக்கை

கொழும்பு, ஓக. 31

இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையே சாதாரண விமான சேவையை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதிய அட்டவணையின் கீழ், மும்பை, சென்னை மற்றும் பெங்ளூ ருக்கு வாரத்துக்கு 4 விமானப் பயணங்களை இயங்கவுள்ளதாக இந்தியாவில் உள்ள இலங்கை தூதரகம் குறிப்பிட் டுள்ளது.

அதேபோல், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருவனந்தபுரம் மற்றும் கொச்சி இடையே வாராந்த விமானங்களும் இயக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஹைதராபாத், புதுடில்லி மற்றும் கொழும்புக்கு இடையே இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை விமானங்கள் இயக்கப்படும் என தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் பயணிகளுக்கான சுகாதார வழிகாட்டுதல்கள் அமுலில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பில் இருந்து நேபாளத்தின் காத்மாண்டுக்கான விமானங்கள் இன்று முதல் மீண்டும் இயக்கப்படவுள்ளன.

(அ)

## அவசரகால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பட்டுள்ள அத்தியாவசிய உணவு விநியோகத்துடன் சம்பந்தப்பட்ட அவசர கால விதிமுறைகள், நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

நெல், அரிசி, சீனி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களை மொத்தமாகப் பதுக்குதல், அதிக விலை அறவிடுவதன் மூலம் நுகர்வோரை அசௌகரியத்துக்கு உள்ளாக்கும் சந்தை முறைகேடுகளைத் தவிர்ப்பதற்காக, அரசாங்கத்தின் உத்தரவாத விலைக்கு அல்லது சுங்கத்தில் இறக்குமதி செய்யப்பட்ட விலையை அடிப்படையாகக் கொண்டு நெல், அரிசி, சீனி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களை மொத்தமாகக் கொள்வனவு செய்து மக்களுக்கு நியாயமான விலைக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதற்கும், அரச வங்கிகளின் மூலம் மொத்தமாகக் கொள்வனவு செய்வதற்கு வழங்கப்பட்டுள்ள கடன், கடன் பெற்றுக்கொண்டவர்களிடம் இருந்து அறவிடப்படக் கூடிய வகையில் இது நடைமுறைப்படுத்தப்படும்.

சாதாரண பொதுமக்களின் வாழ்க்கை நிலையை இயல்பு நிலையில் பேணுவதற்குத் தேவையான நெல், அரிசி, சீனி உள்ளிட்ட ஏனைய நுகர்வுப் பொருட் களை விநியோகிப்பதை ஒருங்கிணைப்புச் செய்வதற்காக, அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் நாயகமாக, மேஜர் ஜெனரல் எம்.டீ.எஸ்.பி.நிவுன்ஹெல்ல நியமிக்கப்பட்டுள்ளார்.

## ஜெனிவா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பார்க்கின்றோம்.

எமது நிலைப்பாடு பற்றி விலாவாரியாக நாம் தெளிவுபடுத்தியிருக்கின்றோம். அந்த நாடுகளிலுள்ள இலங்கையின் தூதுவர்களான மொஹான் பீரிஸ் மற்றும் சி.ஏ சந்திரபிரேம ஆகியோர் மூலமாக இந்தத் தெளிவுபடுத்தலை செய்துள்ளோம். இதற்கு மேலாக கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களை தனித்தனியாக சந்தித்து ஜெனிவா கூட்டத் தொடருக்குத் தொடர்புடைய விடயங்களையும், தெளிவுபடுத்தலையும் வெளிவிவகார அமைச்சர் என்ற வகையில் நான் செய்துள்ளேன்.

இதுகுறித்து நாம் நிச்சயம் கேட்க வேண்டிய கேள்விகள் சில உள்ளன. இன்று உலகின் நிலைமை பற்றி நாம் சிந்தித்தால், குறிப்பாக தெற்காசிய வலயத்தில் பல்வேறு நெருக்கடிகள் உள்ளன. இந்த நிலைமை ஊடாக உலக மக்களுக்கு மேலதிகமான பாரதூரப் பிரச்னைகளும் தலைதூக்குகின்றன. மனிதப் படுகொலை, குண்டு வெடிப்புகள், நிலையற்ற தன்மை, துப்பாக்கி, ஆயுதப் பிரச்னைகள், அகதிகள், தீவிரவாதம் என பிரச்னைகளும் இந்த வலயத்தில் அண்மையில் இடம்பெற்ற சில சம்பவங்களினால் ஏற்படுகின்றன.

எமது நாட்டினால் ஏனைய நாடுகளுக்கோ, எவருக்கும் எந்தப் பிரச்னையும் ஏற்படவில்லை. எனினும் ஒவ்வொரு வருடமாக ஜெனிவா நகரில் இலங்கை பற்றி விமர்சித்து, பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றமையிட்டு அதிர்ச்சியடைகின்றோம். இதற்கு உண்மையான காரணம் என்ன என்கின்ற பிரச்னை எழுகின்றது. இதில் நீதி உள்ளதா? பேச்சு நடத்தபல பிரச்னைகள் உள்ள நிலையிலும், இலங்கையை தெரிவுசெய்து ஏன் இவ்வாறு பேச்சு நடத்துகின்றார்கள் என்கின்ற கேள்வியை நாம் கேட்க வேண்டும் என நினைக்கின்றேன். உண்மையில் இது மனித உரிமைகளுடன் சம்பந்தப்பட்டதா? அல்லது அதற்கு அப்பாலான அரசியல் நிகழ்ச்சி நிரலா?

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கடந்த மார்ச் மாதத்தில் கூடியது. இந்த ஆறு மாத இடைவெளியில் கொரோனா தொற்றின் கடுமையான நெருக்கடியை இலங்கை சந்தித்தது. அந்த காலகட்டத்திலும் அனைத்து துறைகளிலும் பெரும் முன்னேற்றத்தை ஏற்படுத்த அரசாங்கத்தினால் முடிந்த நிலையில் மிகவும் திறந்த மனதில் அதன் தெளிவுகளையும் முன்வைப்பதே எமது அபிப்பிராயமாகவும் உள்ளது. எனவே எமது மக்கள் இந்த நிலைமையில் பாதுகாத்து முன்நோக்கிப் பயணிக்கச் செய்வதற்கு நாம் எடுக்கின்ற இந்த முயற்சிகளுக்கு உதவியளிக்கும்படி அனைத்து நாடுகளிடமும் கேட்டுக்கொள்கின் றேன்.

மகா சங்கத்தினர் உட்பட சர்வமத்தலைவர்களினதும் ஆலோசனைகளை நாங்கள் அனைத்து சந்தர்ப்பங்களிலும் முக்கியத்துவமாகவே அவதானித்தோம். கத்தோலிக்க தேவாலயங்களுடன் எமது அரசாங்கம் மிகவும் நட்புறவுடன் கொடுக்கல் - வாங்கலை செய்கிறது. ஈஸ்டர் தாக்குதலானது அண்மைய காலத்தினுள் இடம்பெற்ற வேதனைக்குரிய சம்பவமாகவே பார்க்கின்றோம்.

கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையை சந்தித்து இதுபற்றி கலந்துரையாடுவதற்கு சந்திப்பிற்கான கோரிக்கையை அவரிடம் முன்வைத்திருக்கின்றேன். ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னர் அரசாங்கம் எடுத்த அனைத்து நடவடிக்கை பற்றி தெளிவுபடுத்தவே இந்த சந்திப்பிற்கான கோரிக்கையை முன்வைத்துள்ளேன். மிகவும் அவதானத்திற்குரிய பதிலை கர்தினால் வழங்கியுள்ளார். கர்தினால் ஆண்டகையின் அலுவலகம், மிகவிரைவில் இந்த சந்திப்பிற்கான சந்தர்ப்பத்தை அளிப்பதாக பதிலளித்துள்ளது. விசேடமாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றப்பத்திரிகை, சந்தேக நபர்கள், உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் அரசாங்கம் எடுத்துள்ள நவடடிக்கைகள் குறித்து அவரை தெளிவுபடுத்துவதே எனது இந்த சந்திப்பிற்கான நோக்கமாகும்.

சட்டமா அதிபர் திணைக்களம் மட்டுமன்றி பொலிஸார், குற்றப் புலனாய்வுப்பிரிவு, புலனாய்வுப்பிரிவு, பயங்கரவாத தடுப்புப் பிரிவு அனைத்து திணைக்களங்களும் எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி கர்திகால் ஆண்டகைக்குத் தெளிவுபடுத்துவதற்கே வெளிவிவகார அமைச்சராக நான் முயற்சிக்கின்றேன். இந்த விடயம் பற்றி அரசாங்கத்திற்கு மிகவும் தெளிவான நோக்கு உள்ளது. அண்மையில் வெளியாகிய அறிவிப்புகள், பல்வேறு போராட்டங்கள் அனைத்திற்கும் அடித்தளமான காரணங்கள் பற்றி நாம் உணர்வடைகிறோம்.

பொறுத்துக்கொள்ள முடியாத வேதனை, கவலை மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி என்பனவே இதற்கான காரணமாகும். எனினும் சில நபர்கள் மாறுபட்ட நோக்கத்திற்காக கத்தோலிக்க தேவாயங்களைத் திசைத் திருப்புவதற்கு முயற்சிக்கின்றார்கள் என்பதற்கான தெளிவான ஆதாரங்கள் உள்ளன. கத்தோலிக்க தேவாலயங்களின் நோக்கம் அதுவல்ல. அதனுடன் சம்பந்தமில்லாத பிரிவுகள் இதில் தலையிடுகின்றன. சர்வதேச அரங்கிலிருந்து அவர்கள் செயற்படுத்தப்படுகின்றனர்.

அரசாங்கத்தை நெருக்கடிக்கு உள்ளாக்கச் செய்வதல்ல, நாட்டின் பொருளாதாரத்திற்குப் பாரிய தாக் கத்தை ஏற்படுத்துவதே அவர்களின் நோக்கம். எனினும் இந்த நோக்கம் இடம்பெற நாம் இடமளிக்க மாட் டோம். குறுக்கு வழியாக முயற்சிக்கின்ற வர்களின் முயற்சியும் வெற்றியளிக்காது. இது குறித்து அனைத்து விடயங்களையும் சர்வதேசத்திடம் முன்வைப்பதற்காக நாம் கிரமமான முறையில் மேற்கொண்டு வருகின்றோம். அதற்கான சூழலையும் ஏற்படுத்துவ தோடு நாட்டின் பாதுகாப்பினையும் உறுதிசெய்து வருகின்றோம்” எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

# கறுப்பு சந்தை மருந்து மாபியாவின் மூலமாக நண்பர்களுக்கு சலுகை வழங்குவதை நிறுத்து!

### அரசிடம் எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து



கொழும்பு, ஓக. 31

கறுப்புச் சந்தை மருந்து மாபியாவின் மூலமாக நண்பர்களுக்குச் சலுகை வழங்குவதை அரசு நிறுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேட்டுக்கொண்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“பி.சி.ஆர். மற்றும் ரெபிட் அன்ரிஜென் பரிசோதனைகளுக்காக அரசு ஆகக்கூடிய விலைகளை நிர்ணயம் செய்து வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டிருந்தாலும், குறித்த வர்த்தமானி அறிவித்தலின் பின்னணியில் பாரிய மோசடி நிலவுகின்றது.

அன்ரிஜென் பரிசோதனையை 600 ரூபாய்க்கும், பி.சி.ஆர். பரிசோதனையை 2 ஆயிரம் ரூபாய்க்கு பெற்றுக்கொள்ள முடியும். ஆனால், அன்ரிஜென் பரிசோதனையை 2 ஆயிரம் ரூபாய்க்கும், பி.சி.ஆர். பரிசோதனையை 6 ஆயிரத்து 500 ரூபாய்க்கும் விலை நிர்ணயித்து அரசு வர்த்தமானி வெளியிட்டது அர்த்தமற்றது.

பரிசோதனைப் பொருட்களை அரச மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபனம் ஊடாகக் கொண்டு வந்து மக்களுக்குச் சலுகை வழங்க முடியுமாக உள்ள நிலையில், தனியார் நிறுவனங்களுக்கு இலாப மீட்ட வழிவகை செய்துள்ளது.

அன்ரிஜென் பரிசோதனையை 600 ரூபாய்க்கும், பி.சி.ஆர். பரிசோதனையை 2 ஆயிரம் ரூபாய்க்கும் விலை நிர்ணயம் செய்து, மீண்டும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட வேண்டும்” - என்றுள்ளது.

## 4,562...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பேர் குணமடைந்துள்ளனர்.

இதற்கமைய, நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 71 ஆயிரத்து 992 ஆக அதிகரித்துள்ளது. (இ)

## கொரோனாவால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உயிரிழந்தனர். இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மட்டும் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 242 ஆக அதிகரித்தது.

இதேபோன்று, கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட 72 வயதுடைய இரு ஆண்களும் நேற்று தொற்றால் உயிரிழந்தனர். (ஐ-2-3)

## 216பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிரிவினராவார். 91 ஆண்களும், 79 பெண்களுமாக 170 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர்.

இந்த மரணங்களின் எண்ணிக்கையுடன் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 8 ஆயிரத்து 991 ஆக உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைச்சரவை அந்தஸ்த்துடன் கூடிய உயர் ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள மிலிந்த மொற கொட, நேற்று பதவியேற்றுக்கொண்டதாகவும், இது குறித்த நிகழ்வு எளிமையான முறையில் நடைபெற்றது எனவும் இந்தியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இலங்கை உயர் ஸ்தானிகராலய பணியாளர்கள் பாரம்பரிய வழக்கப்படி மிலிந்தவையும், அவரது மனைவி ஜெனிபர் மொறகொடவையும் உயர் ஸ்தானிகராலயத்தில் வெற்றிலை கொடுத்து வரவேற்றனர். இதனை முன்னிட்டு விஷஷ் பிரித் நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் ஊழியர்கள் மத்தியில் உரையாற்றிய மொறகொட, இலங்கையின் நலன்களை முன்னெடுப்பதற்காக அனைவரும் ஒரு குழுவாகச் செயற்பட வேண்டும் என வலியுறுத்தியதுடன், இலங்கை - இந்திய உறவுகளை மேன்மையான நிலைக்குக் கொண்டு செல்வதறகாக உழைக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## காணாமல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தினத்தையொட்டி அவர் நேற்று வெளியிட்டுள்ள ருவிட்டர் செய்தியிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வலிந்து காணாமல் ஆக்குவது பாதிக்கப்பட்டவர்களை மாத்திரம் அன்றி அவர்களது குடும்பத்தையும் மற்றும் சமூகத்தையும் பாதிப்படையச் செய்கின்றது என்றும் அமெரிக்க தூதுவர் தெரிவித்துள்ளார். (இ)

## 32கர்ப்பவதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஊடக வியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் ,

கர்ப்பவதிகளுக்கான தடுப்பூசி வழங்கும் வாரம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய இதுவரையில் 75 சதவீதமான கர்ப்பவதிகள் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர். எனினும், தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் துரிதமாக அதனை பெறவேண்டும். ஏனெனில், கர்ப்பவதிகளுக்கு தொற்று ஏற்பட்டால் அவர்கள் தீவிர நிலைமையை அடையக் கூடிய வாய்ப்புக்கள் அதிகம்.

கோவிட் தொற்றால் இதுவரையில் 32 கர்ப்பவதிகள் உயிரிழந்தனர். இது ஓர் அபாயமான நிலைமையாகும். கர்ப்பவதிகள் துரிதமாக தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டால் கோவிட் தொற்றிலிருந்து பாதுகாப்பு பெற முடியும் -என்றும் அவர்கூறினார். (ஐ)

## தென்னாபிரிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பாதிக்க வல்லதாக இருக்கலாம் என்று அவர்கள் கருதுகின்றனர்.

சுகாதார திணைக்களம் மேலும் கூறுகையில், இலங் கையில் இந்த வகை திரிபு கண்டறியப்படவில்லை. ஆனால், உலகளவில் வேகமா கப் பரவி வருவதால் அது குறித்து உலக சுகாதார அமைப்பு எச்சரிக் கையுடன் உள்ளது.

ஆய்வின்படி, தென்னா பிரிக்காவில் கண்டறியப்பட்ட இந்தத் திரிபு சி.1.2 ஆகும். இது மற்றைய திரிபுகளையும் விட அதிவேகமாகத் தொற்றக்கூடி யது. தற்போது கிடைக்கும் தடுப்பூசிகளின் திறனை தவிர்க்கவல்லதாக இருக்கலாம்.

இந்தத் திரிபு - சி.1.2, டெல்டா திரிபை விட ஆபத்தானதா என்பதை விஞ்ஞானிகள் ஆய்வு செய்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# மாடு மேய்க்க சென்றவர் மயங்கி வீழ்ந்து உயிரிழப்பு

*அம்பாறை, ஓக. 31*

அம்பாறை மாவட்டம், கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துரைவந்தியமேடு கிராமத்தில் மாடு மேய்க்கச் சென்ற ஒருவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்த நிலையில் சடலமாக நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளார் என்று கல்முனை பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு, மண்டூர் பிரதேசத்தை சேர்ந்த 55 வயதுடைய 3 பிள்ளையின் தந்தையான செல்லத்துரை கிருஷ்ணமூர்த்தி என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த நபர் நேற்று அதிகாலை 4 மணியளவில் தனது வீட்டிலிருந்து மட்டக்களப்பு வெல்லாவெளி பிரதேசத்தில் ,ருந்து வாவி ஊடாக கல்முனை நற்பட்டிமுனைக்கு மாடுகளைச் சாய்த்துச் சென்ற நிலையில் கல்முனை துரைவந்தியமேடு ஆற்றுக்கு அருகில் மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (இ)

# தொற்றாளரை அழைத்துச் சென்ற நோயாளர் காவு வண்டி விபத்து!

*அவிசாவளை, ஓக. 31*

கொரோனாத் தொற்று உறுதியான பெண் ஒருவரை வைத்தியசாலைக்கு அழைத்து சென்ற நோயாளர் காவு வண்டி கேகாலை - அவிசாவளை வீதியின் தெஹியோவிட்ட பகுதியில் பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

கொரோனாத் தொற்றுக்குள்ளான பெண்ணை தெரணியகலையில் இருந்து அவிசாவளை மாவட்ட வைத்தியசாலைக்கு அழைத்து சென்றபோதே, நேற்று அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

எதிர்த்திசையில் பயணித்த லொறி இடமளிக்காமை காரணமாக குறித்த நோயாளர் காவு வண்டி பள்ளத்தில் வீழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

எவ்வாறாயினும், இந்த விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## மரண அறிவித்தல்

மலர்வு 20 - 11 - 1941



உதிர்வு 28 - 08 - 2021

### சிவக்கொழுந்து வாணர் சிவகுமார்

யாழ். புலோலி மேற்கு தம்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், கனடா Scarboroughவை வதிவிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து வாணர் சிவகுமார் கடந்த 28.08.2021 சனிக்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.அன்னார், காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து சிவபாக்கியம் தம்பதிகளின் அருமை மகனும்,சீதாதேவி (கனடா) அவர்களின் ஆருயிர்க் கணவரும்,நிர்மல் சுரேஷ்குமார் (பிரித்தானியா), யாமினி நிர்மலி(பிரித்தானியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், Rosemary Jane ( பிரித்தானியா ), சதாசிவம் இரவீந்திரன் ( பிரித்தானியா ) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சிறீஸ்கந்தராஜ் அவர்களின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற மாணிக்கமாலை அவர்களின் அன்பு மைத்துனரும், ரவி சிறீஸ்கந்தராஜ் ( அவுஸ்திரேலியா ) அவர்களின் அன்புச் சிறிய தந்தையும், பிரகதீஷ் ( பிரித்தானியா ), யாஷவி ( பிரித்தானியா) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**நிர்மல் சுரேஷ்குமார் - மகன்**
**Mobile : +16477664266**

தகவல்:
**குடும்பத்தினர்**

## இலங்கை தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு

# நிலையான தீர்வை காண்பதற்கு காத்திரமான பல நடவடிக்கைகளை எடுப்பார் தமிழக முதல்வர்

## விக்னேஸ்வரன் எம்.பி. நம்பிக்கை



*யாழ்ப்பாணம், ஓக. 31*

“தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்து நீண்ட காலம் பெரும் சிரமங்கள் மத்தியில் வாழ்ந்துவரும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு நன்மை அளிக்கும் பல்வேறு திட்டங்களை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழ்நாடு சட்டப்பேரவையில், 110ஆவது விதியின் கீழான அறிக்கை ஒன்றின் மூலம் வெளியிட்டுள்ளமை மிக்க மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும், உற்சாகத்தையும் அளித்துள்ளது. இதற்காக தமிழக முதலமைச்சருக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேவேளை, இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு நிலையான ஒரு தீர்வைக் காண்பதற்கு எதிர்வரும் காலங்களில் தமிழக முதலமைச்சர் காத்திரமான பல நடவடிக்கைகளை எடுப்பார் என்ற நம்பிக்கை இலங்கைத் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள் ளது.”

- இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“தமிழ்நாட்டில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களின் குடும்பங்களுக்கு வீடுகள் கட்டித் தருவது உட்பட பல்வேறு திட்டங்களையும் சலுகைகளையும் அவர்களுக்குத் தமிழக முதலமைச்சர் வழங்க இருக்கின்றார். அத்துடன், இலங்கைத் தமிழர் அகதி முகாம் என்பது இனி இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் என அழைக்கப்படும் என்று சட்டப்பேரவையில் முதலமைச்சர் அறிவித்துள்ளமை இலங்கை தமிழ் மக்களின்பால் அவர் கொண்டுள்ள பாசம், அரவணைப்பு ஆகியவற்றைக் காட்டுகின்றது. அத்துடன், முதலமைச்சரின் இந்த அறிவிப்பு “உங்களுக்கு நாங்கள் இருக்கின்றோம்” என்ற ஒரு செய்தியைச் சொல்லுவதாக அமைவதாகவும் நான் உணர்கின்றேன்.

இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல், சமூக, பொருளாதார அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கான ஆய்வுகள், உபாயங்கள் ஆகியவற்றை மேற்கொள்வதற்கு தமிழ் நாட்டின் புத்திஜீவிகள், கல்விமான்கள், செயற்பாட்டாளர்கள் ஆகியோரைக் கொண்ட கட்சிசாரா சிந்தனை மையம் ஒன்றை அரசின் ஒரு நிறுவனமாக தமிழக முதலமைச்சர் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் வேண்டுகோள் ஒன்றை பணிவுடன் முன்வைக்கின்றேன். அத்தகைய ஒரு நிறுவனத்தை அரசின் ஓர் அங்கமாக ஏற்படுத்தும்போது எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அந்த நிறுவனம் நீடித்து நிலைத்து தமிழ்மக்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கு பெரும் பணியை ஆற்ற முடியும் என்பது எனது நம்பிக்கை.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் ஆட்சிக் காலம் தமிழ் நாட்டின் பொற்காலமாக அமையும் என்பதிலும் இந்தியாவின் முதன்மை மாநிலமாக தமிழ் நாடு விரைவில் பரிணமிக்கும் என்பதிலும் எனக்கு எந்தவித சந்தேகமும் இல்லை. அதேபோல், உலகம் முழுவதிலும் உள்ள தமிழ் மக்களுக்கும் தமிழக முதலமைச்சரின் ஆட்சிக்காலம் பல்வேறு வழிகளிலும் ஆதாரமாக அமையும் என்பதிலும் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கின்றது” - என்றுள்ளது. (இ-3)

# தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கு யாழ். மேயர் நன்றி தெரிவிப்பு

*யாழ்ப்பாணம், ஓக. 31*

தமிழகம் வாழ் இலங்கைத் தமிழர்கள் நலன் தொடர்பில் தீர்மானங்கள் எடுத்துள்ள தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு யாழ்ப்பாணம் மாநகர மேயர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் நன்றி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

”இலங்கையில் உள்நாட்டு யுத்தம் ஆரம்பித்ததில் இருந்து இந்தியாவின் தமிழகத்திற்கு கணிசமான இலங்கைத் தமிழர்கள் புலம்பெயர்ந்து தஞ்சம் கோரி ஏதிலிகளாக வாழ்ந்து வாழ்ந்து வருகின்றனர். தமிழ்நாடு அரசின் தரவுகளின்படி 108 முகாங்களிலும் மற்றும் முகாங்களுக்கு வெளியிலுமாக 92,978 இலங்கை தமிழ் அகதிகள் தமிழகத்தில் வாழ்கின்றனர்.

இதுவரை காலமும் இலங்கைத் தமிழர்களில் பலர் அங்கு இரண்டாம் தர மக்களாக அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில் பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் தமிழக முதல்வராக பதவியேற்ற மு.க.ஸ்டாலின் தன்னுடைய முதலாவது வரவு - செலவுத்திட்டத்திலேயே இலங்கைத் தமிழ் அகதிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் வேலை வாய்ப்புகள், கல்விக்கான உதவித்தொகைகள், மானியங்கள், வீடமைப்பு போன்ற பல திட்டங்களை முன்மொழிந்து அதற்கான நிதியையும் ஒதுக்கி வைத்திருப்பது ஈழத்தமிழர்களுக்கு மட்டுமல்ல உலகத் தமிழர்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் தந்திருக்கின்றது.

தமிழகம் வாழ் இலங்கைத் தமிழர்கள் தொடர்பான தமிழக முதல்வரின் தீர்மானங்களுக்கு எனது நன்றிகளை ஈழத்தமிழர்கள் சார்பில் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

ஒரு தமிழக முதல்வராக தமிழகத்தில் வாழ்கின்ற எங்களுடைய உறவுகளுக்கு உதவிக்கரம் நீட்டி அவர்களுக்கென்றொரு அங்கீகாரத்தை வழங்கி யதுபோல் எங்களுடைய நீண்டகால அரசியல் அபிலாஷைகளை அடைவதற்கும் தமிழகத்தில் வாழ்கின்ற எமது உறவுகள் தமது தாய்நிலம் திரும்பி அவர்களது தாய்மண்ணில் மகிழ்ச்சியாக வாழக்கூடிய வகையில் எமக்கான அங்கீகாரத்தை உலகப்பந்தில் பெற்றுத்தருவதற்கும் தாங்கள் செயலாற்றவேண்டும்.

தமிழகத்தை இந்தியாவின் முன்னிலையான மாநிலமாக மாற்றும் வகையில் முதல்வர் செயற்படுகின்ற விதம் எமக்கு மகிழ்ச்சியை அளிப்பதோடு அப்பயணத்தில் வெற்றி பெற எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்” - என்றுள்ளது. (இ-03)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 31.08.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து - உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர் - மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க - நேரலை

**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ் - வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**
7.00 மணி : கதை நேரம் - நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை - இலக்கிய நிகழ்ச்சி



10.00 மணி : நேருக்கு நேர்

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**ஓம் ஸ்ரீ**

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு ஞாயிறு)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : மறைக்கல்வி (மட்டக்களப்பு) ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம் மறு ஒலிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
06.00 மணி : இயேசுவின் போதனைகள்
07.30 மணி : அன்பியம்( சனி மறுஒளிபரப்பு)

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு